வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு

Eelanadu ඊළනාඩු





Email : news@eelanadu.lk | மலர் : 04 | 11.04.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 122 | பக்கங்கள் : 16

# திருமலை துறைமுகத்தில் இருந்து குழாய் வழி எண்ணெய் விநியோகம்!

## திட்டத்தை செயல்படுத்துகிறது இந்தியா

கொழும்பு, ஏப்ரல் 11

**திருகோணமலை துறைமுகத்திலிருந்து எண்ணெய் குதங்கள் வரை குழாய் மூலம் எண்ணெய் விநியோகிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வுள்ளது. பெற்றோலிய பொருட்களின் விநியோகத்தை விரைவுபடுத்தும் நோக்கில் இந்தியா இந்தத் திட்டத்தை செயல்படுத்தவுள்ளது என்று அறிய வருகின்றது.**



*மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாமல் தடுக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாக குழாய்வழி எண்ணெய் விநியோகத் திட்டம் விரைவுபடுத்தப்படுகின்றது. இது குறித்து இரு நாடுகளும் பேச்சில் ஈடுபட்டு வருகின்றன.*

*அண்மையில், எரிசக்தி முதலீட்டாளர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி ரணில்*

15

## ஜி.சி.ஈ. சாதாரண தர பரீட்சை ஒத்திவைப்பு

*கொழும்பு, ஏப். 11*

*மே 15ஆம் திகதி நடைபெறவிருந்த 2022 ஆம் ஆண்டுக் கான க.பொ.த. சாதா ரண தரப்பரீட்சை இரண்டு வாரங்க ளுக்கு பிற்போடப்பட்டுள்ளது.*

*அன்றையதினம் பரீட்சையை நடத்த முடியாது என்பத னால் இரண்டு வாரங்களுக்கு ஒத்தி வைத்து 29 ஆம் திகதி பரீட்சையை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.*

15

## ஏப்ரல் 25 தேர்தல் இல்லை!

*கொழும்பு, ஏப். 11*

*உள்ளூராட்சிறத் தேர்தல் திட்டமிட்டபடி ஏப்ரல் 25ஆம் திகதி நடத்தப்படாது என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.*

*தேர்தலை நடத்துவது தொடர்பாக உள்ளூராட்சி அமைச்சர் பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு இடையில் நேற்று கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.*

*இச்சந்திப்பைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர, தற்போதைய நிலவரப்படி இம்மாதம் 25ஆம் திகதி தேர்தல் நடத்தப்படமாட் டாது.*

*அத்தோடு*

15

## சிறு குற்றவாளிகளுக்கு வீட்டுக் காவல் தண்டனை!

### நீதி அமைச்சர் விஜயதாஸ

*கொழும்பு, ஏப். 11*

*சிறைப்படுத்தப்படும் நபர் எந்தவகையான குற்றத்துக்காக சிறைப்படுத்தப்பட்டாலும் அவரை பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அத்துடன், சிறிய குற்றங்களுடன் தொடர்புடையவர்களை வீட்டுக்காவலில் வைப்பதற்கு முடியுமான வகையில் சட்டம் அமைக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என நீதி, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.*

*சிறைச்சாலை கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் சிறைச்சாலை திணைக்களத்துக்குரிய அமைச்சின் விடயப் பொறுப்பான அமைச்சருக்கு சாட்டப்பட்டிருக்கும் அதிகா*

15

## இந்த ஆண்டில் இதுவரை 564 பேர் விபத்துகளில் பலி!

*கொழும்பு, ஏப். 11*

*கடந்த ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஏப்ரல் 9ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் வீதி விபத்துகளால் மட்டும் 564 பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸ் தெரிவித்துள்ளது.*

*இந்தக் காலப் பகுதிக்குள் 2 ஆயிரத்து 446 சிறு விபத்துகளும் ஆயிரத்து 345 மோசமான விபத்துகளும் நிகழ்ந்துள்ளன. இதில், 534 விபத்துகளில் 564 பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.*

*ஒவ்வோர் ஆண்டும் சுமார் 2 ஆயிரத்து 500 முதல் 3 ஆயிரம் விபத்துகள் வரை*

15

## எமது ஜனாதிபதி வேட்பாளர் பஸில் என்பதில் தவறில்லை

### பொதுஜன பெரமுன கட்சி

*கொழும்பு, ஏப். 11*

*சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் பஸில் ராஜபக்ஷ என்பதில் தவறொன்றுமில்லை. நடைபெறவுள்ள தேர்தல்களில் பொதுஜன பெரமுன கட்சியின் கொள்கையை முன்னிலைப்படுத்தி செயல்படுவோம் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.*

*கட்சியின் தலைமையகத்தில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரி*

15



பங்குனி திங்களான நேற்று பிரசித்தி பெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயத்தில் பக்தர்கள் பொங்கலிட்டு படையிலிடும் காட்சி...!

(படம் – செ. கிரிசாந்த்)

வெடுக்குநாறிமலை ஆலய விவகாரம்:

## இந்திய தூதருடனான பேச்சு நம்பிக்கை அளிக்கின்றது !

### ஆலய நிர்வாகம் தெரிவிப்பு

*வவுனியா, ஏப். 11*

*வெடுக்குநாறி மலை ஆலயம் தொடர்பான இந்தியத் தூதுவருடனான சந்திப்பு திருப்தியாக அமைந்ததாகவும் விரைவில் தீர்வு கிடைக்க ஆவன செய்வார் என எதிர்பார்ப்பதாகவும் ஆலய நிர்வாக உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார் .*

*கொழும்பிலுள்ள இந்திய தூதுவராலயத் தில் வெடுக்குநாறி ஆலய நிர்வாகத்தினர், வவுனியாவை சேர்ந்த இந்து அமைப்பின் பிரதிநிதிகள், கொழும்பு*

15

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள்; முக்கியஸ்தரும் மனைவியும் கைது!

*கொழும்பு, ஏப். 11*

*உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் முக்கிய சந்தேகநபரும் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான் காசிமின் மைத்துனரும் அவரின் மனைவியும் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டனர்.*

*தற்போது கைது செய்யப்பட்ட நபர் முன்னரும் கைது செய்யப்பட்டு 3 வருடங்கள் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.*

*இவர், குளியாப்பிட்டி - கட்டுபொத்தை பிரதேசத்தில் இருந்து நீர்கொழும்பு - கொச்சிக் கடையில் உள்ள அவரின் மனைவின் பெற்றோரின் வீட்டுக்கு சென்றபோதே கைது செய்யப்பட்டார். அவருடன் அவரின் மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் அதிகாரி ஒருவர்*

15





# பங்குனி திங்கள் திருவிழா மட்டுவிலில் சிறப்புற நடந்தது!

தென்மராட்சி, ஏப். 11

யாழ்ப்பாணத்தின் பிரசித்தி பெற்ற மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்தில் நான்காவது பங்குனித் திருவிழா வான நேற்று ஆயிரக்கணக் கான பக்தர்கள் திரண்டு வழிபாடு நடத்தினர்.

நேற்றுக் காலை இதன் போது, நூற்றுக்கணக்கான வர்கள் பொங்கல், சாதம், வடை, மோதகம் எனப் படையல் பொருட் களை மடை பரவினர். யாழ்ப்பா ணத்தின் பல பாகங்களில் இருந்தும் பக்தர்கள் காவடி, தூக்குக் காவடி, பெண்கள் கற்பூர சட்டி ஏந்தியும், அடி யழித் தும் தமது நேர்த்திக் கடன் களை செலுத்தினர்.

தென்மராட்சிக்கு செல் லும் வீதிகள் தோறும் தண் ணீர் பந்தல்கள் அமைக் கப்பட்டு பக்தர்களுக்கு தாக சாந்தி தீர்க்கும் கைங்கரியங் களும் நடைபெற்றன. மாலைத் திருவிழாவின் போது, மஞ்சத் தில் ஏறி அம்மன் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். நேற்றைய தினம் ஆயிரக்கணக்கான பக் தர்கள் இந்தத் திருவிழாக்க ளில் பங்கேற்றனர். (ஐ)

# அரசாங்கத்தை எதிர்ப்போரை பயங்கரவாதிகளாக்க சட்டம்!

## விமல் வீரவன்ஸவும் சீற்றம்

கொழும்பு, ஏப். 11

அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபடுபவர்களை பயங் கரவாதிகளாக சித்திரிக்கும் வகையில் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றி ணைந்து போராட்டத்தில் ஈடுபட வேண் டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கொழும்பு - நுகேகொடையில் நேற்று நடந்த நிகழ்வு ஒன்றிலேயே அவர் இவ் வாறு கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடுமை யான நிபந்தனைகளை அமுல்படுத்து வதை தவிர மாற்றுத்திட்டங்கள் ஏதும் அரசாங்கத்திடம் கிடையாது.

தேசிய தொழில்துறையை மேம்படுத் துவது தொடர்பில் நடைமுறைக்கு சாத் தியமான எந்த திட்டங்களும் செயல் படுத்தப்படவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்த னைக்கு அமைய தேசிய வளங்களையும் அரச நிறுவனங்களையும் விற்று பொரு ளாதார நெருக்கடிக்கு நிலையான தீர்வு காண முடியாது. அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்துவது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரதான பொருளாதார கொள்கையாக உள்ளது.

அரச நிறுவனங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கினால் தேசிய மட்ட தொழில்துறை மோசமாக பாதிக் கப்படும் நிலை தோற்றம் பெறும். அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்தும் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு மக்கள் மத்தியில் இருந்து கடுமையான எதிர்ப்பு தோற்றம் பெறும்.

மக்கள் போராட்டத்தை முடக்குவதற் காகவே உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து ஜனநாயக போராட்டத்தில் ஈடுபடும் சகலரும் பயங்கரவாதிகளாக சித்தரிக் கப்படுவார்கள்.

இந்த சட்டமூலத்தை நிறைவேற்ற இடமளிக்க கூடாது. நாட்டு மக்கள் சகல ரும் ஒன்றிணைந்து கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும். 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் நாட்டு மக்கள் ஐக்கிய தேசிய கட்சியை முழுமையாக புறக்கணித்தார் கள். ஆகவே ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங் மக்களின் அபிலாசைகளுக்கு மதிப்பளிப்பதில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான பொருத்தல் அரசாங் கத்தில் சுதந்திர மக்கள் கூட்டணியின் உறுப்பினர்கள் எவரும் ஒன்றிணைய போவதில்லை. ஐக்கிய மக்கள் சக்தியின் பெரும்பாலான உறுப்பினர்கள் அர சாங்கத்துடன் ஒன்றிணைவார்கள் - என் றார். (ஐ)

# சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்த சபை

கொழும்பு, ஏப். 11

சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்து வது தொடர்பான ஒளிபரப்பு அதிகார சபை ஒன்றை ஸ்தாபிப்பது குறித்து அர சாங்கம் அவதானம் செலுத்தி வருவதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரி விக்கும் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அங்கு ஒளிபரப்பு அதிகார சபையை அமைப்பதற்கான மசோதாவை சமர் பிப்பதற்கான வரைவுத் தயாரிப்புக்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

இது அனைத்து ஊடகங்களுக்கும் பொருந்தும் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## உயிர்த்த...

தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட இந்த நபர், சஹ்ரான் காசிமின் மனைவியான பாத்திமா என்பவருடைய சகோதரர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸாருக்கு கிடைத்த புலனாய்வு தகவல்களின் பிரகாரம், சந்தேகத் தின் பேரில் இந்த இருவரும் கைது செய் யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நபர் 2019ஆம் ஆண்டில் இருந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். 2022 செப்ரெம் பர் 23ஆம் திகதி மேல்நீதிமன்றத்தின் ஊடாக பிணையில் விடுவிக்கப்பட்டி ருந்தார் என்றும் பொலிஸ் அதிகாரி யொருவர் தெரிவித்தார். (ஐ)

## சிறு...

ரத்துக்கு அமைய 3 வருட காலத்துக்காக நாட்டில் இருக்கும் அனைத்து சிறைச் சாலை நிறுவனங்களுக்கும் பிரதேச கண் காணிப்பு குழு உறுப்பினர்கள் நியமிக்கப் படுவார்கள்.

நாட்டில் இருக்கும் சிறைச்சாலை களில் தற்போது சுமார் 26ஆயிரம் பேர் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். அதில் குற்றவாளியாக்கப்பட்ட 800 பேர் வரை இருக்கின்றனர். யாரேனும் நபர் ஒருவர் சிறைப்படுத்தப்படுவதற்கு ஏதாவ தொரு சமூக காரணம் இருக்கலாம்.

குற்றம் என்னவாக இருந்தாலும் சிறைப்படுத்தப்பட்ட பின்னர், அவர் களை கவனித்து பாதுகாப்பது அரசாங் கத்தின் பொறுப்பாகும். அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற வசதிகளுக்கு மேலதிக மாக கைதிகளுக்கு தேவையான நல னோம்பு வசதிகளை பெற்றுக்கொடுக்க சிறைச்சாலை கண்காணிப்பு குழு நடவ டிக்கை எடுக்கவேண்டும்.

அத்துடன், 1934ஆம் ஆண்டுக்கு பின்னர் முதல்தடவையாக மனிதாபி மான அடிப்படையில் இந்த நாட்டு சிறைச்சாலை ஒழுங்கு விதிகளில் திருத் தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறைச்சாலையில் இருக்கும் நபர்களை புனர்வாழ்வளிப்பதற்காக சிறைச் சாலைக்குள்ளேயே 6 நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இதேபோன்று சிறு குற்றங்கள் செய் வர்களை வீட்டுக்காவலில் வைக்க முடி யுமா என தேடிப்பார்ப்பதற்காக சட்டம் அமைப்பதற்கு தற்போது குழுவொன்று அமைக்கப்பட்டிருக்கிறது - என்றார்.

## எமது ஜனாதிபதி...

வித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனா திபதி வேட்பாளர் என்று ஆளும் தரப் பின் ஒருசில உறுப்பினர்கள் குறிப்பி டுவது அவர்களின் தனிப்பட்ட கருத்தே தவிர சிறீ லங்கா பொதுஜன பெரமு னவின் உத்தியோகபூர்வ தீர்மானமல்ல.

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுன அமைச்சரவையை முழுமையாக பதவி விலகுமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ குறிப்பிட்டார். அதேபோல் நிதியமைச்சர் பதவியில் இருந்து விலகி கட்சியின் அரசியல் செயல்பாட்டில் அவதானம் செலுத்து மாறு பஸில் ராஜபக்ஷவிடம் குறிப் பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கட்டளைக்கு அமைய சிறீ லங்கா பொதுஜன பெரமுன அர சாங்கம் முழுமையாக பதவி விலகியது. இறுதியில் பெறுபேறு பிறிதொரு தரப்பினருக்கு சாதகமாக அமைந்தது.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் பஸில் ராஜபக்ஷ என்பதில் தவறேதுமில்லை. ராஜபக்ஷ க்கள் நாட்டுக்கு எதிராக ஒருபோதும் செயல்படவில்லை. நடைபெறவுள்ள தேர்தல்களில் பொதுஜன பெரமுனவை முன்னிலைப்படுத்தி செயல்படுவோம் - என்றார். (ஐ)

## இந்திய...

இந்து மாமன்ற பிரதிநிதிகள் உள்ளடங் கிய குழு இந்திய தூதுவர் கோபால் பாக்லேயை நேற்று சந்தித்துப் பேசினர் ..

சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் வெடுக்கு நாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விக்கிர கங்கள் சேதமாக்கப்பட்டது , மீண்டும் விக்கிரகங்கள் வைப்பதற்கு தொல் பொருள் திணைக்களம் ஏற்படுத்திய தடைகள் குறித்து கலந்துரையாடப் பட்டது. எல்லையோர கிராமங்களில் நடைபெறும் ஆக்கிரமிப்புகளுடன் சைவ அடையாளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன . (ஐ)

## திருமலை...

விக்கிரமசிங்க, வடக்கில் புதுப்பிக் கத்தக்க சக்தி வளங்கள் அதிகமாக காணப்படுவதால், பச்சை ஐதரசன் உற்பத்திக்கு சாதகமான இடமாக திருகோணமலை அடையாளம் கண்ட தாகத் தெரிவித்தார்.

நாடு பெரும் பொருளாதார நெருக் கடியில் சிக்கியுள்ள நிலையில், திருகோ ணமலையில் உள்ள 99 எண்ணெய் தாங் கிகளையும் துரிதமாக புனரமைக்கும் திட்டத்தை முன்னெடுக்கவும் ஜனாதிபதி பணித்திருந்தார். இதன்படி, பயன்படுத் தப்படாமல் உள்ள 61 எண்ணெய் குதங் களை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவற்றை லங்கா ஐ. ஓ. சி. நிறுவனமும் இலங்கை பெற் றோலிய கூட்டுத் தாபனமும் இணைந்து முன்னெடுக்கவுள்ளன.

திருகோணமலை துறைமுகத்துக்கு எண்ணெய் விநியோகக் குழாய் அமைப் பது இலங்கையின் எரிசக்தி பாது காப்பை மேம்படுத்தும் என்றும் இது இரு நாடுகளிடையேயுமான பொருளா தார ஒத்துழைப்பை வலுப்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

எண்ணெய் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் இலங்கைக்கு தொடர்ச்சியான ஆதரவை வழங்க இந்தியா தயாராக உள்ளது என்று இந் திய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள் ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஏப்ரல் 25...

எதிர்காலத்தில் தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கும் திறைசேரி அதிகாரி களுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்றும் நடத்தப்படும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பான அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும்-என்றார். (அ)

## இந்த...

அதிகமானவை கவனக்குறைவாக வாக னம் ஓட்டுவதால் நிகழ்பவை. கடந்த இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் வீதி குறைபாடுகள், வாகன கோளாறு களால் ஏற்படும் விபத்துகள் மிகக் குறை வாகவே உள்ளன என்றும் அவர் தெரி வித்தார். (ஐ)

## ஜி.சி.ஈ...

அரசாங்கத்தின் புதிய வாரிக்கொள்கை மற்றும் அதற்கு எதிரான ஆசிரியர்களின் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக முன்னதாகவும் பரீட்சை ஒத்திவைக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# செட்டிக்குளத்தில் புத்தர் சிலை வைத்தவர் மனநோயாளியாம்!

## பொலிஸார் கூறுகின்றனர்

வவுனியா, ஏப். 11

செட்டிக்குளத்தில் புத்தர் சிலையை வைத்தவர் மன நோயாளியாம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, செட்டிக்குளத்தில் நேற்றுமுன்தினம் திடீரென புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டமை அப்பகுதி மக்களிடையே பெரும் பதற்றத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்திய செட்டிக்குளம் பொலிஸார் ஒருவரை கைது செய்து விடுவித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மனநலம் பாதிக்கப்பட்ட ஒருவரே புத்தர் சிலையை வைத்தார் என்றும் அதனால், அவரை கைது செய்த பின்னர் விடுதலை செய்ததாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

வைக்கப்பட்ட புத்தர் சிலை அந்த இடத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளது. (ஐ)

# ஐக்கிய மக்கள் சக்தியினர் சிலர் புத்தாண்டின் பின் கட்சி மாறுவர்!

## அந்தக் கட்சியின் எம். பியே சொல்கிறார்

கொழும்பு, ஏப். 11

ஐக்கிய மக்கள் சக்தியின் சில உறுப்பினர்கள் புத்தாண்டை அடுத்து கட்சி மாறுவார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார ஜயமஹ நேற்று திங்கட்கிழமை உறுதிப்படுத்தினார்.

மேலும், "கட்சி மாறுவதை நாங்கள் மறுக்க முடியாது. ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சிலர் கட்சி மாறுவர்", என்று கூறிய அவர், ஜனாதிபதி ரணில் பற்றி புகழ்ந்து பேசிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தொடர்பில் குறிப்பிடுகையில்,

அவருக்கு எப்போதுமே கட்சி தாவி சென்று அமைச்சுப் பதவியை ஏற்கும் எண்ணம் இருந்தது. ராஜிதவுக்கு எப்போதுமே ஜனாதிபதியை ஆதரிக்கும் ஓர் எண்ணம் இருந்தது. அத்துடன், கடந்த காலங்களில் பல தடவை அவர் இதுபோன்ற செயல்களை செய்திருப்பதால், கட்சி தாவுவது ராஜிதவுக்கு ஒரு பெரிய விடயமில்லை - என்றார். (ஐ)

# மனைவியின் தாக்குதலில் 29 வயதான கணவன் பலி!

கொழும்பு, ஏப். 11

குடும்பத் தகராறால் மனைவி கத்தியால் குத்தியதில் 29 வயதான கணவன் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று பொலநறுவை, புலஸ்திபுர பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் நீண்டகாலமாக இடம்பெற்று வரும் குடும்ப தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது. நேற்றைய தினம் இருவரும் கடுமையாக சண்டையிட்டுள்ளனர். அப்போது மனைவி கணவனை கத்தியால் குத்தியுள்ளார். இதில் ஆழமான காயங்களுக்கு உள்ளான கணவர் காயமடைந்து புலஸ்திகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். உயிரிழந்தவர் 29 வயதுடைய புலஸ்திகம பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

இந்த சம்பவத்தில் காயமடைந்த மனைவி பொலநறுவை மருத்துவமனையில் பொலிஸாரின் கண்காணிப்பில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ஐ)

# பொலிகண்டியில் 84 கிலோ கஞ்சா மீட்பு

வடமராட்சி, ஏப். 11

வடமராட்சி - பொலிகண்டி கடற்கரையில் 84 கிலோ கேரளா கஞ்சா நேற்று திங்கட்கிழமை மீட்கப்பட்டது.

கடற்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நடத்திய தேடுதல் நடவடிக்கையில் இந்த கஞ்சா மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. (ஐ-02)

# பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஏப். 11

நீர்வேலி கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா கோவிலின் பிரதம குருக்கள் சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்களின் தலைமையில் எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இதில், எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை கார்த்திகைத் திருவிழாவும் முதலாம் திகதி திங்கட்கிழமை மாம்பழத் திருவிழாவும், 02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வேட்டைத் திருவிழாவும், 03ஆம் திகதி புதன்கிழமை சப்பை ரதத் திருவிழாவும், 04 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும் 05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ஐ)



பலாலி வீதி ஊரெழு மேற்கு சுன்னாகம் சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறி நூலகத்துக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒரு தொகுதி நூல்களைப் பொறுப்பாளர் து. ஜெயதீஸ்வரனிடம் வழங்கி வைத்தார்.

# இப்படியும் நடக்கிறது...!

அரசியல் விமர்சகர் என்று மட்டும் அவரை சுருக்கிவிட முடியாது என்று பல தடவைகள் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருக்கின்றேன்.

பனங்காட்டான் பற்றி இந்தப் பத்தியில் பல தடவை குறிப்பிட்டாகிவிட்டது. நேற்று முன்தினம் வெளியாகியிருந்த அவரின் கட்டுரை பற்றியே இப்போது பலரும் பேசி வருவதை அவதானிக்க முடிகின்றது.

"தமிழ் மக்களின் தலைவிதியையே தீர்மானிக்கின்ற நிலையில் இருந்த ஒரு பாரம்பரிய கட்சிக்கு தலைவரை தேடி 'சூம்' வழியே கூட்டம் நடக்கின்றது", என்று அவர் எழுதிய அந்தச் செய்தி பற்றியே பலரும் பேசி வருவதைக் காணமுடிகின்றது.

பலரும் "அது உண்மையா...? உண்மையா...", என்று இந்த ஊர்க்குருவிடம் கேட்டதிலிருந்தே அதன் முக்கியத்துவத்தை உணரமுடிந்தது.

இவ்வாறான 'சூம்' வழி கலந்துரையாடல் இரண்டு நடத்தப்பட்டன எனவும் ஒரு கூட்டம் சுமந்திரனுடன் என்றும் மற்றையது தமிழரசின் சிரேஷ்ட உபதலைவர் சீ. வீ. கே. சிவஞானம் அவர்களுடன் என்றும் பனங்காட்டான் தகவல் தந்திருந்தார்.

இரண்டு பேருடனும் முக்கியமாக பேசப்பட்டது மாவையிடமிருந்து எப்படி தலைமைப் பதவியை 'பறிப்பது' என்பது பற்றியதுதான்.

அந்த இருவரில் ஒருவர் கட்சித் தலைமைக்கு குறி வைத்திருப்பவர். மற்றையவர் மிக அண்மைக்காலம்வரை மாவையின் வலது கரமாக வலம் வந்தவர். மாவையை எப்படி தலைமைப் பதவியிலிருந்து வெளியேற்றலாம் என்பது குறித்து ஆராய்வது, அவரை நன்கு அறிந்த ஒருவருடன்தான் பேசவேண்டும் என்பதை கட்சியின் அந்த வெளிநாட்டுக் கிளையினர் நன்றாகத்தான் அறிந்து வைத்திருக்கின்றார்கள்.

அதைவிட முக்கியமானது, அவர் சுமந்திரனின் தலைமைப் பதவிக்கான போட்டியில் இருக்கும் சிறீதரனுடன் நெருக்கமான உறவைக் கொண்டிராதவர்.

தமிழரசு கட்சியின் கனடா கிளையும் லண்டன் கிளையுமே இயங்கிக்கொண்டிருப்பவை. அதிகம் சொல்வதானால் தாயகத்தில் கட்சியின் செயல்பாடுகளைவிட கனடாவில் கட்சியின் செயல்பாடு அதிகமானது. அவர்களே கட்சியில் பல விடயங்களில் முடிவெடுப்பவர்களாகவும் இருந்திருக்கின்றனர்.

தலைவரை மாற்றுவதில் அவர்களின் இலக்கு எதுவாக இருக்கும் என்பது இரகசியமானதல்ல. அவர்கள் கட்சியின் வளர்ச்சியில் உண்மையான அக்கறை கொள்பவர்களாக இருந்திருந்தால், கட்சியின் தலைமைப் பதவிக்கு போட்டியிடப் போவதாகப் பகிரங்கமாகவே கூறிவரும் சுமந்திரனுடனும் சிறீதரனுடனும் பேசியிருக்கவேண்டும்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் சுமந்திரனை ஆதரித்து - அவரை அன்ரன் பாலசிங்கம் 'ரேஞ்சுக்கு' உயர்த்தி அவருக்காக பிரசாரம் செய்ததால் சிறீதரன் இழந்தது கொஞ்சமல்ல. இருபத்தி ஐயாயிரம் வாக்குகளை. தனது அரசியல் வாழ்க்கையையே பணயம் வைத்து சுமந்திரனை ஆதரித்தவர். அவர் அப்படி செய்யவில்லை என்றால், என்ன நடந்திருக்கும் என்பது சுமந்திரனுக்கு மாத்திரமே தெரிந்தது.

தனக்கு தேர்தலில் ஆதரவு வழங்கினால் அவரை கட்சியின் தலைவராக ஆக்குவதில் அவருக்கு ஆதரவாக நிற்பேன் என்று சுமந்திரன் தனக்கு வாக்குறுதி தந்ததாகவும் அதனை அவர் காப்பாற்றவேண்டும் என்றும் சிறீதரன் பொதுவெளியில் அண்மையில் தெரிவித்திருந்தார். அதனை இதுவரை சுமந்திரன் மறுத்ததாகவும் தெரியவில்லை. அவர் அப்படி வாக்குறுதி வழங்கியிருந்தாலும் அதனை நிறைவேற்ற வேண்டும் என்பது கட்டாயமானது என்று அரசியல் அகராதியில் சொல்லப்படவுமில்லைத்தான்.

எந்த வாக்குறுதியைத்தான் அரசியல்வாதிகள் இதுவரை நிறைவேற்றியிருக்கின்றார்கள்?

அதுவல்ல, நாம் இன்று சொல்ல வருவது.

தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து வெளியேற மாவை உடன்பட்டு கட்சிக்கு புதிய தலைவர் தெரிவுக்காக பொதுக்குழுக் கூட்டம் நடைபெறுமானால் இருவர் போட்டியிடுவது உறுதியாகியிருக்கின்றது. அப்படி இருவர் போட்டியிட்டால் கட்சி பிளவுபட்டுவிடும் என்று பலரும் ஆருடம் தெரிவித்து வருகின்றனர்.

தமிழரசு கட்சியின் தலைவர் விவகாரத்தால் கட்சி பிளவுபட்டுவிடும் என்று அச்சமடைவதால் அப்படி நடந்து விடக்கூடாது என்று கட்சியின் இந்த வெளிநாட்டுக்கிளைகள் நினைக்கின்றனவா அல்லது தாம் விரும்புகின்ற ஒருவரிடம் கட்சித் தலைமையை மாற்றிவிடவேண்டும் என்று நினைக்கின்றனவா என்பது தெரியவில்லை.

மாவை கட்சியின் தலைமைப் பதவிக்கு பொருத்தமானவரா என்பது வேறு விடயம். ஆனால், அவர் கட்சியை- அதன் கொள்கையை எந்தக் கட்டத்திலும் அடகு வைக்கக்கூடியவர் அல்ல.

கட்சிக்கு யார் பொருத்தமான தலைவர் என்பதை தாயகத்திலுள்ள கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்களே முடிவெடுக்கவேண்டும். அதைவிடுத்து அவரிடமிருந்து கட்சித் தலைமையைப் பறித்து வேறு ஒருவரிடம் கொடுக்க வெளியார் முயலக்கூடாது.

- ஊர்க்குருவி

ஈழநாடு
Eelanadu
11.04.2023 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், பங்குனி 29

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்தியாவிடம் முறையிடுதல்?

வடக்கு - கிழக்கின் பாரம்பரிய இந்து ஆலயங்கள்மீதான நெருக்கடிகள் அதிகரித்து வருகின்றன. இந்த விடயத்தில் இந்தியா உதவ வேண்டுமென்று தமிழர் பக்கத்தில் கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. திருகோணமலை – திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் ஏற்பட்ட பிரச்னைகளை தொடர்ந்து இந்திய தூதுவர் பாக்லே விடயங்களை நேரடியாக பார்வையிட்டிருந்தார். இந்திய தூதரகம் விடயங்களை கவனித்ததைத் தொடர்ந்து விடயம் முடிவுக்கு வந்தது. திருக்கோணேஸ்வர ஆலய வளாகத்துக்குள் கடைகளை அமைப்பது மற்றும் அப்பகுதியை உல்லாசத் துறைக்குரிய இடமாக விஸ்தரிப்பது போன்ற விடயங்களை முன்னெடுப்பதற்கு தொல்பொருள் திணைக்களம் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது.

வெடுக்குநாறிமலை சிவன் ஆலய விவகாரமும் தற்போது இந்திய தூதரகத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றது. இந்து ஆலயங்கள் அமைந்துள்ள இடங்களில் பௌத்த விகாரைகள் இருந்தன என்று கூறும் விடயம் தற்போது தீவிரமடைந்திருக்கின்றது. இந்தத் தீவிரத்துக்குப் பின்னால் இருக்கும் அரசியல் தொடர்பில் பலரும் பலவாறான அபிப்பிராயங்களை கூறிவருகின்றனர். தற்போது இந்த விடயத்தில் இந்தளவு தீவிரம் ஏன் காண்பிக்கப்படுகின்றது? முன்னரும் இவ்வாறான சம்பவங்கள் நடந்திருந்தாலும்கூட, இந்து ஆலயங்கள் அமைந்துள்ள இடங்களில் இந்தளவு தீவிரம் காண்பிக்கப்படவில்லை.

இதில், இரண்டு விடயங்களை கவனிக்க வேண்டியிருக்கின்றது. அண்மைக்காலமாக பி. ஜே. பி. மற்றும் அதன் பின்தளமான ஆர். எஸ். எஸ். அமைப்பை நோக்கி செல்ல வேண்டுமென்னும் கருத்துகள் தமிழர் தாயகத்தில் முன்வைக்கப்படுகின்றன. அதேபோன்று, தமிழ்நாட்டு பி. ஜே. பி. தலைவர் அண்ணாமலையும் ஈழத்தமிழர் விடயத்தில் கூடுதல் கவனத்தை செலுத்தி வருகின்றார். வடக்குக்கு இரண்டு முறை பயணம் செய்திருக்கின்றார்.

வடக்கிலுள்ள இந்து அமைப்புகள், தனிநபர்களோடு தொடர்புகளை பேணிவருகின்றார். இந்த விடயத்தை சிங்கள தேசியவாத ஆளும் தரப்பு மகிழ்ச்சியுடன் நோக்கவில்லை. வடக்கை, பி. ஜே. பி., ஆர். எஸ். எஸ். செல்வாக்குள்ள இடமாக மாற்றிவிடுவார்களோ என்னும் அச்சமும் சிங்கள ஆளும் வர்க்கத்துக்கு ஏற்பட்டிருக்கலாம். அதற்கு முன்னர், பாரம்பரிய இந்து ஆலயங்கள் இருக்கின்ற இடங்கள் அனைத்திலும் வரலாற்று ரீதியாக பௌத்த ஆலயங்களும் ஒன்றாகவே இருந்திருக்கின்றன என்பதை நிரூபிக்கும் வகையில் செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமென்று ஆளும் தரப்பு எண்ணியிருக்கலாம். இதன் மூலம், வடக்கு ஒரு தனியான மதத்துக்குரிய பகுதியல்ல. இது இந்து மதமும் பௌத்தமும் பின்னிப்பிணைந்திருந்த பகுதியாகும் என்பதை நிரூபிக்க முற்படலாம்.

இது ஒரு காரணமாக இருக்க வாய்ப்புண்டு. அடுத்தது, ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தப் போவதாகக் கூறிவருகின்றார். ஒருவேளை அவர் வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் திகதியுடன் புதுடில்லி செல்லவும் வாய்ப்புண்டு. மாகாண சபைக்கான அரசாங்கம் இயங்கத் தொடங்கினால் அதன் பின்னர் தொல்பொருள் திணைக்களம் இலகுவாக விடயங்களை முன்னெடுக்க முடியாது. அத்துடன், மாகாண சபை அதிகாரங்கள் பேசுபொருளாக இருக்கின்ற நிலையில் முடிந்தவரையில் மாகாண சபை நிர்வாகத்துக்கு சிக்கலில்லாத மத்திய நிர்வாகம் ஒன்றை முன்னெடுக்கவே கொழும்பும் விரும்பும். எனவே, அவ்வாறானதொரு சூழல் உருவாவதற்கு முன்னர் இவ்வாறான விடயங்களை செய்து முடித்துவிட வேண்டுமென்று ஆளும் தரப்பு கருத இடமுண்டு.

தற்போது இடம்பெற்றுவரும் விடயங்களை இவ்வாறான பின்புலத்தில்தான் நோக்க வேண்டியிருக்கின்றது. ஆனால், இந்தப் பிரச்னைக்கு ஏன் இந்தியாவை நாட வேண்டும்? இந்துக்கள் விடயத்தில் இந்தியா கரிசனை கொள்ளும் என்னும் அடிப்படையிலா? இதுதான் விடயமென்றால், இந்திய அரசுக்கு அப்பால், இந்தியாவிலுள்ள இந்துகளின் பாதுகாப்புக்காக குரல்கொடுக்கும் பலமான அமைப்புகளை நோக்கியும் இந்த விடயத்தைக் கொண்டு செல்ல வேண்டும். அதன் மூலம்தான், இந்த பிரச்னையை இந்திய மயப்படுத்த முடியும். இந்தியாவிடம் முறையிட வேண்டுமென்று எண்ணுபவர்கள் இந்த விடயத்தை கருத்தில்கொள்ளலாம்.

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை அரசாங்கம் மீளப்பெறவேண்டும்!

## தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்து

*கொழும்பு, ஏப். 11*

*ஜனநாயக நியமங்களை மீறும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை அரசாங்கம் மீளப் பெற வேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்தியுள்ளது.*

*இது தொடர்பில் அந்த அமைப்பு நேற்று விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளது.*

*அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,*

*பயங்கரவாத எதிர்ப்பு சடடமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதை தாமதிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இந்த தீர்மானத்தை வரவேற்றிருக்கும் தேசிய சமாதானப் பேரவை சட்டமூலம் ஜனநாயக பரப்பிலும் அரசியல் கட்சிகள், தொழில்சங்கங்கள் மற்றும் சிவில் சமூக செயல்பாட்டாளர்களுக்கு இருக்கும் உரிமைகளிலும் எதிர்மறையான தாக்கத்தை செலுத்தக்கூடியதாக இருப்பதால் அதை சமர்ப்பிப்பது குறித்து மறுபரிசீலனை செய்யுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகிறது.*

*எந்தவொரு சட்ட சீர்திருத்தத்திலும் அடிப்படை உரிமைகளும் குடிமக்களின் பாதுகாப்பும் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். எல்லாவற்றுக்கும் மேலாக அரசமைப்பின் பிரகாரம் மக்களின் அதிகாரம் அவர்களின் பயனுக்காகவே அரசாங்கத்துடன் பகிர்ந்துகொள்ளப்படுகிறது. பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் இவ்விரு குறிக்கோள்களையும் அடையத் தவறுகிறது. அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டிருக்கும் புதிய சட்டமூலம் அது பதிலீடு செய்ய உத்தேசிக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் விட மிகவும் மோசமான பல அம்சங்களை கொண்டதாக இருக்கிறது.*

*சட்டமூலத்தின் ஏற்றுக்கொள்ளமுடியாத பல அம்சங்களில் பயங்கரவாதத்துக்கு அது கொடுக்கும் தெளிவற்றதும் விசாலமானதுமான வியாக்கியானம் மிகவும் முக்கியமானதாகும்.*

*அரசாங்க சொத்துக்களையும் ஏன் தனியார் சொத்துக்களையும்கூட களவாடுதையும் தொழில் சங்க நடவடிக்கையையும் சட்டமூலம் பயங்கரவாதச் செயல்கள் என்று வியாக்கியானப்படுத்துகிறது. யார் யாரை கைதுசெய்யமுடியும் ? அவர்களை யாரால் கைதுசெய்யமுடியும்? எந்த நோக்கத்துக்காக அவர்கள் கைதுசெய்யப்படுகிறார்கள்? என்ற விடயங்களைப் பொறுத்தவரை சட்டமூலம் மிகவும் பரந்தளவுக்கு இடங்கொடுப்பதாக அமைகிறது.*

*எதிர்ப்புக் காட்டுதல், பிரசுரங்களை வெளியிடுதல், அரசாங்கத்திடம் இருந்து நடவடிக்கைகளை எதிர்பார்த்து கோரிக்கைகளை முன்வைத்தல் மற்றும் இன, மத தலங்களுடன் தொடர்புடைய தகராறுகள் உட்பட பெருவாரியான நியாயபூர்வமான நடவடிக்கைகளை சடடமூலம் பயங்கரவாத வீச்சு எல்லைக்குள் கொண்டு வருகிறது.*

*இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக தாங்கள் ‘ நியாயமான முறையில் சந்தேகிக்கும் எவரையும் பிடியாணையின்றி கைதுசெய்வதற்கு பொலிசாரை அல்லது இராணுவத்தினரை அல்லது கரையோரக்காவல் படையினரை சடடமூலம் அனுமதிக்கிறது. பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு பதிலீடு செய்வதற்கு புதிய சட்ட மூலத்தை வரைந்தவர்களின் மனப்போக்கில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்று தோன்றுகிறது.இது துரதிர்ஷ்டவசமானது. பயங்கரவாதம் என்று காரணத்தைக் கூறி அரசியல் செயல்பாடுகளை ஒடுக்குவதில் நாட்டம் கொண்ட மனப்போக்கே இருக்கிறது என்பதற்கான அறிகுறிகளே தெரிகின்றன.*

*பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் நாம் அனுபவித்தவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் கீழ் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்பு மிகவும் பெருமளவில் இருக்கிறது.*

*பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 14 வருடங்களாக சிறைவைக்கப்பட்டிருந்த மூவர் கடந்த மாதம்தான் மேல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். ஒருவரை கைது செய்யும் பொலிஸாரோ அல்லது இராணுவத்தினரோ அவரை தாங்கள் தெரிவுசெய்யும் ஓர் இடத்தில் 24 மணித்தியாலங்கள் வரை தடுத்துவைப்பதற்கு புதிய சட்டமூலம் அனுமதிக்கிறது. நிலவரத்தை பொறுத்து அவரை மேலும் கூடுதலான நேரம் தடுத்துவைக்கமுடியும்.*

*அவ்வாறு கைதுசெய்யப்படக்கூடிய ஒரு இளைஞனின் அல்லது யுவதியின் அவலத்தை நினைத்துப் பாருங்கள். கைது செய்யப்படும் ஒருவருக்கு எதிராக பிரதி பொலிஸ்மா அதிபர் தரத்தில் உள்ள ஒரு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி கையெழுத்திட்டு பிறப்பிக்கக்கூடிய தடுப்புக்காவல் உத்தரவுக்கு பிறகு அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாமல் மூன்று மாதங்களுக்கு தடுப்புக்காவலில் வைக்கமுடியும்.*

*பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் அரசமைப்பை மீறுவதுடன் ஜனநாயக சமுதாயம் ஒன்றில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள சுதந்திரங்களுக்கும் மனித உரிமைகளுக்கும் ஆபத்தை உண்டாக்கி அவற்றை பயங்கரவாதமாக உருமாறாட்டம் செயவதால் அதை தேசிய சமாதானப் பேரவை எதிர்க்கிறது. புதிய தேவைகளை கையாள்வதற்கு, அவசியமானால் தற்போது நடைமுறையில் உள்ள தண்டனை சட்டக் கோவையையும் குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையையும் பலப்படுத்தலாம் என்று நாம் யோசனை முன்வைக்கிறோம்.*


*அதற்கு பதிலாக பயங்கரவாதத்தை கையாளுவதற்கு முற்றிலும் புதிய சட்ட மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் தேவையில்லை.*

*புதிய பாதுகாப்பு சட்டங்கள் அவசியம் என்று கருதினால் அவற்றை எமது அரசமைப்பும் சர்வதேச நியமங்களும் நெறிப்படுத்துகின்ற மனித உரிமைகள் வரையறைக்குள் இயற்றுவது அவசியம்.*

*பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை அரசாங்கம் மீளப்பெறவேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை கோருகிறது. அல்லாவிட்டால் விளைவுகளைப் பொருட்படுத்தாமல் அடிப்படை மனித உரிமைகள் மீறல்களை செய்வதற்கும் குறைகளை சுட்டிக்காட்டி கண்டிப்பவர்களையும் எதிர்க்கருத்து கொண்டவர்களையும் மௌனமாக்குவதற்கும் அந்த சட்டம் அரசாங்கத்துக்கு அதிகாரமளிக்கும்.*

*(ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஏப்ரல் - 11 செவ்வாய்க்கிழமை
சுபகிருது வருடம் - பங்குனி 28
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : சஷ்டி




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். வியாபாரத்தில் பழையசரக்குகளை போராடி விற்பீர்கள். உத்தியோகத்தில் பிரச்சினைகள் வந்து நீங்கும்.

**இடபம்**
உங்கள் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரிக்கும். உத்தியோகத்தில் புது சலுகைகள் கிடைக்கும்.

**மிதுனம்**
குடும்பத்தில் உங்கள் மதிப்பு கூடும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். இரட்டிப்பு லாபம் உண்டு. சவாலான வேலைகளை யும் சாதாரணமாக முடிப்பீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கடகம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். உங்களின் கனவு நனவாகும்.

**சிம்மம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**கன்னி**
தன்னிச்சையாக சில முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் பழையவேலையாட்களை மாற்றுவீர்கள். அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள்.

**துலாம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் லாபம் கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் சில நேரங்களில் மன அமைதியற்ற நிலை ஏற்படும். வேலையாட்கள் உங்களால் அதிருப்தி அடைவார்கள். உத்தியோகத்தில் வளைந்து போவது நல்லது.

**தனுசு**
கொஞ்சம் அலைச்சலும் சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் கனிவாக பழகுங்கள். உத்தியோகத்தில் முக்கிய பணிகளை போராடி முடிப்பீர்கள்.

**மகரம்**
உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்வீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் சில முக்கியஸ்தர்களை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**கும்பம்**
உணர்ச்சிப்பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் பேசுவீர்கள் செயல்படுவீர்கள். வியாபாரத்தில்தள்ளிப்போனஒப்பந்தம்கையெழுத்தாகும். மேலதிகாரிகளிடம் மரியாதை கூடும்.

**மீனம்**
இதுவரை இருந்த அசதி சோர்வு, குடும்பத்தில் அமைதி திரும்பி மகிழ்ச்சி அதிகரிக்கும். நீங்கள் எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும்.

# பிரேரணையில் ஒப்பமிடுவதற்கு ஆளுநருக்கு காலக்கெடு நிர்ணயம்!

## சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றம்

சென்னை, ஏப். 11

சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பப்படும் பிரேரணைகளுக்கு ஆளுநர் ஒப்புதல் வழங்க குறிப்பிட்ட கால நிர்ணயம் செய்ய, மத்திய அரசையும், குடியரசுத் தலைவரையும் வலியுறுத்தும், அரசின் தனித் தீர்மானம் தமிழக சட்டப்பேரவையில் நிறைவேறியது.

ஆளுநரின் நடவடிக்கைகளுக்கு எதிராக நாளை மதச் சார்பற்ற கூட்டணியின் சார்பில் போராட்டம் நடைபெறவுள்ளது. இந்நிலையில் ஆளுநரின் செயல்பாடு தொடர்பாக அரசு சார்பில் தமிழ்நாடு சட்டப்பேரவையில் தனித் தீர்மானம் கொண்டுவர முடிவு செய்யப்பட்டது. இதன்படி, ஆளுநர் தொடர்பாக சட்டப்பேரவையில் விவாதிக்கக் கூடாது என்ற விதிகளை தளர்த்துவதற்கான தீர்மானம் தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஆளுநருக்கு எதிரான தனித் தீர்மானத்தை முதல்வர் மு. க. ஸ்டாலின் கொண்டு வந்தார்.

இதன்படி, சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் வழங்க குறிப்பிட்ட கால நிர்ணயம் செய்ய, மத்திய அரசையும் குடியரசுத் தலைவரையும் வலியறுத்தும் அரசின் தனித் தீர்மானத்தை சட்டப்பேரவையில் முதல்வர் கொண்டு வந்தார்.

இந்தத் தீர்மானத்தின் மீது, தமிழக வாழ்வுரிமை கட்சி சட்டமன்ற உறுப்பினர் வேல்முருகன், கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி சட்டமன்ற உறுப்பினர் ஈஸ்வரன், மனிதநேய மக்கள் கட்சி சட்டன்ற உறுப்பினர் ஜவாஹிருல்லா, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைச் செல்வன், மதிமுக சட்டமன்ற உறுப்பினர் சதன்திருமலைக்குமார், காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் செல்வப்பெருந்தகை, பாமக சட்டமன்ற உறுப்பினர் ஜி.கே.மணி, அவை முன்னவர் துரைமுருகன் உள்ளிடோர் பேசினர். இதனைத் தொடர்ந்து, அரசின் தனித் தீர்மானம் சட்டப்பேரவையில் நிறைவேறியது. (ஐ)

# அ. தி. மு. கவின் திருச்சி மாநாட்டுக்கு சசிகலாவுக்கு முறையாக அழைப்பு!

## பன்னீர்செல்வம் தெரிவிப்பு

திருச்சி, ஏப். 11

திருச்சி மாநாட்டில் பங்கேற்க சசிகலாவை முறையாக அழைப்பது பற்றி பிறகு அறிவிப்பு வரும் என்று மதுரையில் முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

ஓ.பன்னீர்செல்வம் நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையில், "முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்தநாள் விழா, கட்சி தோன்றி 50 ஆண்டு பரிபூரண வெற்றியைக் கண்டது, 51ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் விழா என, முப்பெரும் விழா திருச்சியில் வரும் 24 ஆம் திகிதி நடக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள அ. தி. மு. க. தொண்டர்கள் இலட்சக்கணக்கில் குழுமி கட்சியின் வலிமையை அங்கே நிரூபிப்பார்கள்.

கட்சியிலிருந்து முன்பு நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் அன்வர் ராஜா, முன்னாள் எம்.பி. கே.சி. பழனிச்சாமி போன்றோர்களுக்கு உறுதியாக அழைப்பு விடுக்கப்படும். அவர்கள் தொடர்ந்து கட்சியில் தான் இருக்கின்றனர். கட்சியின் மூத்த முன்னோடிகள் அனைவருக்கும் மாநாட்டில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்படும். அவர்கள் நிச்சயம் பங்கேற்பர்.

திருச்சி மாநாட்டில் எவ்வளவு பேர் பங்கேற்பர் என, நீங்களும் (செய்தியாளர்கள்) நேரடியாக பார்க்கத்தான் போகிறீர்கள். சசிகலா போன்றவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுமா என்ற கேள்விக்கு பதிலளித்த, ஓபிஎஸ்., முறைப்படியான அறிவிப்பு ஒவ்வொன்றாக வரும். அனைவரும் கலந்து கொள்வார்கள்" என்று கூறினார்.

# அ. தி. மு. க. - பா. ஜ. க. இடையே எந்த முரண்பாடுகளும் இல்லை!

## முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன்

ஈரோடு, ஏப். 11

அ. தி. மு. க. - பா. ஜ. க. இடையே முரண்பாடு இல்லை என்று முன்னாள் அமைச்சர் கே. ஏ. செங்கோட்டையன் தெரிவித்தார்.

அ. தி. மு. க. வுக்கு தொண்டர்களை சேர்க்கும் நிகழ்விலேயே அவர் மேற்படி தெரிவித்தார்.

மேலும், எம். ஜி. ஆர்., ஜெயலலிதாவைப் போல அ. தி. மு. கவை பொதுச்செயலாளர் பழனிசாமி சிறப்பாக வழி நடத்திச் செல்கிறார். தற்போது அ. தி. மு. க. சார்பில் புதிய உறுப்பினர் சேர்க்கைக்கான படிவம் வழங்கப்பட்டு வருகிறது.

மக்களவைத் தேர்தலில் புதுச்சேரி உட்பட 40 தொகுதிகளிலும் அ. தி. மு. க. மகத்தான வெற்றி பெறும். அடுத்தாண்டு நடக்கும் மக்களவைத் தேர்தல் திருப்பு முனையாக அமையும். 2026ஆம் ஆண்டு நடக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் அ. தி. மு. க. அசைக்க முடியாத சக்தியாக விளங்கி ஆட்சி அமைக்கும்.

தேர்தல் கூட்டணி குறித்து நாங்கள் தெளிவாக உள்ளோம். அ. தி. மு. க. - பா. ஜ. க. இடையே முரண்பாடுகள் இல்லை. நேர சூழல் காரணமாக, பிரதமர் - பழனிசாமி சந்திப்பு நடைபெறவில்லை. பிரதமரை எங்கு எப்போது சந்திக்க வேண்டுமோ, அப்போது பொதுச்செயலாளர் பழனிசாமி சந்திப்பார், என்றார். (ஐ)

## ராகுல் காந்தி தகுதி இழப்பு விவகாரம்

# தமிழ்நாடு முழுவதும் சனியன்று போராட்டம்!

சென்னை, ஏப். 11

காங்கிரஸ் முக்கிய தலைவர் ராகுல் காந்தி தகுதி இழப்பு நடவடிக்கையைக் கண்டித்து வரும் சனிக்கிழமை தமிழகம் முழுவதும் ரயில் மறியல் போராட்டம் நடைபெறும் என்று அந்தக் கட்சியின் மாநிலத் தலைவர் கே. எஸ். அழகிரி கூறியுள்ளார்.

சென்னையில் தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் தலைவர் கே.எஸ்.அழகிரி செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியவை,

"தலைவர் ராகுல் காந்தி தகுதி இழப்பு நடவடிக்கையை கண்டித்து, வரும் சனிக்கிழமை, 76 காங்கிரஸ் மாவட்டங்களில் ரயில் மறியல் போராட்டம் நடத்தப்படும். இந்த மிகப்பெரிய போராட்டம் தமிழ்நாடு முழுவதும் நடைபெறும்.

பின்னர், எதிர்வரும் 20ஆம் திகதி, மத்திய அரசு அலுவலகங்கள் முன்னால் ஆர்ப்பாட்டம் செய்ய திட்டமிட்டிருக்கிறோம். இந்த போராட்டங்களின் இறுதியாக ஓர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தவும் முடிவு செய்துள்ளோம்.

இதன்போது, பிரதமருக்கு எதிரான கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், "ஜனநாயகத்தைப் பாதுகாக்கவே, பிரதமரின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தப்பட்டது. பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சிகள் எழுப்பும் கேள்விகளுக்கு பதிலளிப்பது ஆளுங்கட்சியின் கடமை.

எதிர்ப்பைத் தெரிவிக்க ஒரு போராட்டம் பதிவு செய்யப்பட வேண்டும். அது அண்ணா சாலையில் நடந்தாலும், வள்ளுவர் கோட்டத்தில் நடந்தாலும் எல்லாம் ஒன்றுதான். எதிர்ப்பை இப்படித்தான் இந்த இடத்தில்தான் பதிவு செய்ய வேண்டும் என்று எண்ணுவது ஒரு தாழ்வு மனப்பான்மை" என்றார்.




## இந்திய அரசாங்கம் வழங்கியுள்ள 26 புதிய பஸ்கள் நுவரெலியாவுக்கு

கொழும்பு, ஏப். 11
நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களிலுள்ள இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான டிப்போக்களுக்கு இந்திய அரசாங்கத்தினால் கடன் உதவித் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட புதிய பஸ்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் போக்குவரத்து அமைச்சர் திரு. பந்துல குணவர்தன தலைமையில் நுவரெலியா கிரகரி வாவி பகுதியில் இடம்பெற்றது.

நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களில் உள்ள ஏழு டிப்போக்களுக்கு 26 புதிய பஸ்கள் இதன்போது கையளிக்கப்பட்டன. மேலும் இந்த புதிய பஸ்களை தோட்ட மற்றும் கிராமப்புற வீதிகளில் பயணிக்கவும், அதன் மூலம் கிராமப்புற மற்றும் தோட்டப்புற மக்களுக்கு முறையான போக்குவரத்து வசதிகளை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

இந்த புதிய பஸ்கள் நுவரெலியா மாவட்டத்தில் ஹற்றன், நுவரெலியா, கொத்மலை, வலப்பனை, ஹங்குராங்கெத்த மற்றும் கண்டி மாவட்டத்தில் நாவலப்பிட்டி மற்றும் கம்பளை ஆகிய டிப்போக்களுக்கே வழங்கப்பட்டுள்ளன.

இதன்போது, நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சி. பி. ரத்நாயக்க, எஸ். பி. திசாநாயக்க, மருதப்பாண்டி ரமேஸ்வரன் மற்றும் டிப்போ அத்தியட்சகர்கள், டிப்போ ஊழியர்கள், அரச உத்தியோகத்தர்கள் என பெருமளவானோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

## சொந்தப் பணத்தில் ரஷ்யா சென்று திரும்பிய அமைச்சர்

கொழும்பு, ஏப். 11
போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, தனது அமைச்சின் கீழ் உள்ள பல பகுதிகளின் அபிவிருத்திக்காக ரஷ்ய அரசாங்கத்தின் ஆதரவைப் பெறுவதற்கான திட்டங்களுடன் கடந்த வாரம் ரஷ்யா மற்றும் பெலாரஸ் ஆகிய நாடுகளுக்கு அதிகாரபூர்வ பயணத்தினை மேற்கொண்டார்.

அமைச்சர் ஒருவருக்கு விமானத்தில் கிடைக்கும் ஆடம்பர வசதிகளுக்குப் பதிலாக, அமைச்சர் கட்டுநாயக்காவில் இருந்து மொஸ்கோ வரை விமானத்தின் சாதாரண பயணிகளுக்காக ஒதுக்கப்பட்ட சாதாரண வகுப்பு இருக்கையில் பயணம் செய்தார். ஒன்பது மணி நேர விமானப் பயணத்தில் சாதாரண பயணிகளுடன் பங்கேற்ற அமைச்சர், ஒரு விமானத்துக்கு ஒதுக்கப்பட்ட பெரும் தொகையைச் சேமிக்கும் பணியில் ஈடுபட்டார்.

மேலும், குறித்த பயணத்திற்காக அமைச்சிடம் இருந்து பணம் பெற்றுக் கொள்ளாத அமைச்சர், தனது தங்குமிட வசதிகள் மற்றும் ஏனைய செயற்பாடுகளை தனது சொந்தப் பணத்தில் செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது. தனது குறுகிய பயணத்தின் போது, அமைச்சர் ரஷ்யா மற்றும் பெலாரஸ் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்கள் மற்றும் அந்த நாடுகளில் உள்ள பல்கலைக்கழக துறை தலைவர்களுடன் பல கலந்துரையாடல்களில் ஈடுபட்டதுடன், போக்குவரத்து பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு அந்த நாடுகளின் ஆதரவைப் பெற முடிந்தது.

மேலும், அமைச்சர் நடத்திய கலந்துரையாடலின் மூலம், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறையில் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு ரஷ்யா மற்றும் பெலாரஸ் நாடுகளிடமிருந்து பெரும் பங்களிப்பைப் பெற முடிந்தது. (அ)

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் சிங்களவரை அடிமையாக்கும்

### சிறிதரன் எம்.பி. எச்சரிக்கை



கொழும்பு, ஏப். 11
**பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது சிங்கள மக்களைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்தார்.**

தமிழர்களை மட்டுமல்லாமல் சிங்கள இனத்தையே அடிமைப்படுத்தப்போகும் ஒரு சட்டமாக இது அமையும் என்றும் சிறிதரன் எச்சரித்தார்.

நேற்று முன் தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எதிர்ப்புக்கள் காரணமாக இந்த சட்டமூலம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதே தவிர, அதனை நடைமுறைப்படுத்த ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் சிறிதரன் தெரிவித்தார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தை அமுல்படுத்த அனுமதிக்க போவதில்லை என்றும் அதற்கான முழு முயற்சியை எடுப்போம் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## ரயில் மற்றும் பஸ் பயணிகள் ரிக்கெட்டுக்கு கியூ.ஆர் குறியீடு

கொழும்பு, ஏப். 11
ரயில் மற்றும் பஸ் பயணிகளுக்கான பயணச்சீட்டுக்கு பதிலாக கியூ.ஆர். குறியீடு அறிமுகப்படுத்தப்படும் என போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இந்த வருடம் இந்த வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என அமைச்சர் பந்துல குணவர்தன கூறினார்.

புதிய தொழில்நுட்பம் உள்ளிட்ட கியூ.ஆர் அமைப்பின் ஊடாக பயணச்சீட்டை தானே பெற்றுக்கொள்ளும் முறைமை உருவாக்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

## மே தின கூட்டத்தை பிரமாண்டமாக நடத்த ஐக்கிய தேசிய கட்சி திட்டம்!

கொழும்பு, ஏப். 11
மே தின நிகழ்வுகளை கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

மே முதலாம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஐ.தே.கவின் மே தினப் பேரணி ஆரம்பமாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற கட்சி முகாமைத்துவ சபை கூட்டத்தில் மே தின கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்வது குறித்து கலந்துரையாடப்பட்டது.

கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தலைமையில் மே தினப் பேரணி ஏற்பாடு செய்யப்படுவதாகவும், சுகததாச விளையாட்டரங்கில் நடைபெறும் மே தினப் பேரணியில் நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு மாவட்டத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியின் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் கலந்துகொள்வார்கள் எனவும் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார். .

கொரோனா நெருக்கடி காரணமாக ஐக்கிய தேசியக் கட்சி கடந்த மூன்று வருடங்களாக மே தினக் கூட்டங்களை நடத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கையில் போதைப்பொருள் பாவனை அதிகரிக்க அரசியல்வாதிகளே முழு காரணம்

### சுமந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப்.11
இலங்கையில் போதைப் பொருள் பாவனை அதிகரிக்க அரசியல்வாதிகளே காரணம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அண்மைக்காலமாக போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதாகவும் இதனை தடுத்து நிறுத்தாமையால் சிறுவர்களும், இளைஞர்களும் துன்பங்களை அனுபவித்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் விநியோகத்துடன் தொடர்புடையவர்கள் எவரும் இதுவரை முழுமையாக கைது செய்யப்படவில்லை என்றும் இதில் ஆட்சியாளர்களின் தலையீடு காணப்படுவதாகவும் சுமந்திரன் தெரிவித்தார்.

போதைப்பொருள் விநியோகத்தை தடுப்பது மிகவும் கடினமான விடயமாக இருப்பதனால், போதைப் பொருள் பாவனை தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளை அனைவரும் மேற்கொள்ளவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்தவர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல்

கொழும்பு, ஏப். 11
கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்த மூன்று வர்த்தகர்களுக்கு எதிராக ஹட்டன் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஹற்றன், கொட்டகலை மற்றும் நோர்வூட் பிரதேசங்களில் முட்டைகளை அதிக விலைக்கு வியாபாரிகள் விற்பனை செய்துள்ளதாக முறைப்பாடு கிடைத்துள்ளது.

வெள்ளை மற்றும் சிவப்பு முட்டைகளை 56 ரூபாய் முதல் 60 வரையிலான விலைகளில் விற்பனை செய்துள்ளதாக நுகர்வோர் சேவை அதிகார சபையின் நுவரெலியா மாவட்ட அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மஸ்கெலியா மற்றும் கொட்டகலை நகரங்களில் உணவுப் பொருட்களை விலை காட்டாமல் விற்பனை செய்த மூன்று வர்த்தகர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

## ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு? மொட்டுக் கட்சி எம்.பி. மழுப்பல் பதில்

கொழும்பு, ஏப். 11
2024 ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் கட்சி மட்டத்தில் எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை என்று பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

"2024 இல்தான் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும். அத்தேர்தல் தொடர்பில் எமது கட்சியில் உள்ள சிலர் தனிப்பட்ட ரீதியில் கருத்துக்களை முன்வைத்துவருகின்றனர். அது கட்சியின் நிலைப்பாடு கிடையாது. இது சம்பந்தமாக கட்சி எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை."
- என்றும் அவர் கூறினார். (அ)

# புத்தாண்டுக்குப் பின்னர் கட்சி தாவல் நடக்கலாம்

## கூறுகிறார் நளின் பண்டார



கொழும்பு, ஏப். 11

**தமது தரப்பின் ஒரு சில உறுப்பினர்கள் புத்தாண்டுக்குப் பின்னர் அரச தரப்பிற்கு தாவலாம் என ஐக்கிய மககள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.**

எனினும், ரணில் விக்கிரமசிங்கவின் குடும்ப ஊடகங்கள் பிரசாரம் செய்வதை போல, ஐக்கிய மக்கள் சக்தியில் பெரிய பாதிப்பை அது ஏற்படுத்தாது.

தாவல்களை நாங்கள் மறுக்க முடியாது. ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து ஒரு சில உறுப்பினர்கள் கடந்து செல்வார்கள் என்று அவர் கூறினார்.

தற்போதைய ஜனாதிபதி விக்கிரமசிங்கவைப் புகழ்ந்து பேசிய பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவைப் பற்றி குறிப்பிடுகையில், அவருக்கு எப்போதுமே கட்சி தாவி அமைச்சுப் பதவியை ஏற்றுக் கொள்ளும் எண்ணம் இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

“ஜனாதிபதி விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் எண்ணம் ராஜிதாவுக்கு எப்போதும் இருந்தது. கடந்த காலங்களில் அவர் பலமுறை செய்ததால், கடப்பது அவருக்கு பெரிய விடயமல்ல” என்று அவர் கூறினார்.

(அ)

# விமல்,உதய கம்மன்பிலவுடன் மீண்டும் இணைகிறார் மகிந்த!

கொழும்பு, ஏப். 11

முன்னாள் ஜனாதிபதியும் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷவுடன் நீண்ட காலம் இருந்து அண்மையில் அவரை விட்டு விலகிய விமல் வீரவன்சவையும் உதய கம்மன்பிலவையும் ஒன்றிணைக்கும் நடவடிக்கை திரைமறைவில் தொடங்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், கடந்த வாரம் மகிந்த மற்றும் உதய கம்மன்பிலவுக்கு இடையில் சிறப்பு கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்கு பின்னணி தயாரிக்கப்பட்டது. சர்வதேச நாணய நிதியம் விதித்துள்ள பாதகமான நிபந்தனைகள் மற்றும் இலாபம் ஈட்டும் அரச நிறுவனங்களை தனியார் மயமாக்குவது தொடர்பில் மகிந்தவும் உதய கம்மன்பிலவும் நீண்ட நேரம் கலந்துரையாடியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, சாதகமான பதில்களுடன் கலந்துரையாடல் நிறைவடைந்துள்ளது.

இது தவிர மகிந்தவுக்கும் விமலுக்கும் இடையில் சிறப்பு கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்குத் தேவையான பின்னணியும் திரைமறைவில் தயாராகி வருவதாகக் கூறப்படுகின்றது.

இடைத்தரகர் ஒருவர் ஊடாக இது தொடர்பான செய்திகள் பரிமாறப்பட்டதில் விமல் தரப்பில் இருந்து சாதகமான பதில்கள் கிடைத்துள்ளதாகவும், அடுத்த சில தினங்களில் மகிந்தவுக்கும் விமலுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று இடம்பெறும் எனவும் தெரியவந்துள்ளது.

(அ)

# மகிந்தவின் வீட்டுக்கு செல்லும் கோட்டாபய

கொழும்பு, ஏப். 11

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விஜேராம மாவத்தைக்கு வரும் வரையில் வசித்து வந்த புல்லர் மாவத்தையில் உள்ள அதிகாரபூர்வ வீட்டில் விரைவில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குடியேறவுள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து வெளியேறிய கோட்டாபய ராஜபக்ஷ, பௌத லோக மாவத்தையில் உள்ள அரசாங்கத்தின் அதிகாரபூர்வ இல்லத்தில் வசித்து வந்தார். ஆனால், மிகவும் ஆரவாரமான சூழலில் அந்த வீடு அமைந்திருப்பதால், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விஜேராம மாவத்தைக்கு வரும் வரையில் வசித்து வந்த புல்லர் மாவத்தையில் உள்ள அதிகாரபூர்வ வீட்டை தனக்கு வழங்குமாறு கோட்டா பல சந்தர்ப்பங்களில் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்து வந்தார்.

இந்நிலையில் அவரது கோரிக்கை நிறைவேற்றப்படாத நிலையில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் மிரிஹானையில் உள்ள தனது தனிப்பட்ட இல்லத்திற்கு கோட்டாபய செல்ல நடவடிக்கை எடுத்துள்ளார்.

எனினும், கடந்த வாரம் மகிந்த வாழ்ந்த அதிகாரபூர்வ இல்லத்தை கோட்டாவுக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. அதன்படி கடந்த வாரம் வீட்டின் சாவியை கோட்டாபய பெற்றுக் கொண்டார். தற்போது அவர் வீட்டுக்கு புதிய தள பாடங்களை வாங்கி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

(அ)

# விடுமுறை காலத்தில் மது அருந்திவிட்டு வேகமாக வாகனம் செலுத்தவேண்டாம்!

கொழும்பு, ஏப். 11

அண்மைக்காலமாக பல வீதி விபத்துக்களில் பாடசாலை மாணவர்கள் உயிரிழந்துள்ளதாகவும், பெற்றோர்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டுமெனவும் காவல்துறை பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொலிஸ் அதிகாரிகளால் வீதியில் செல்லும் ஒவ்வொரு வாகனத்தையும் சோதனை செய்ய முடிவதில்லை.

இதனைக் கருத்திற் கொண்டு, குறிப்பாக பெற்றோர்கள் பாடசாலை மாணவர்களிடம் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த விடுமுறை காலத்தில் மது அருந்திவிட்டோ மிக வேகமாகவோ வாகனம் செலுத்த வேண்டாம்.

மதுபோதையில் வாகனம் செலுத்தினால் உங்களுக்கும், வீதியில் செல்பவர்களுக்கும், வாகனத்தில் உள்ளவர்களுக்கும் ஆபத்து ஏற்படக்கூடும்.

விபத்து ஏற்பட்டால், உயிர் மற்றும் உடைமைகளுக்கு சேதம் ஏற்படலாம். இந்த பண்டிகை காலத்தில் மகிழ்ச்சியாக நேரத்தை செலவிடுங்கள்.

ஆனால் வேடிக்கையானது கடைசியில் சோகமாக மாறக் கூடாது என்பதை நினைவூட்டுகிறேன்.

வீதியில் பயணிக்கும் போது, கவனமாக பயணிக்க வேண்டும். விபத்துகளைத் தவிர்க்க அவதான இருங்கள்- என்றார்.

(அ)

# வீதிகளை பயன்படுத்தவும் கட்டணம்?

ஓஊஊ, ஏப். 11



சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளிற்குட்பட்டு, பொதுமக்கள் மீது அரசாங்கம் சுமத்தியுள்ள வரிச்சுமையால் மக்கள் பெரும் திண்டாட்டத்தை சந்தித்து வரும் நிலையில், வீதிகளில் பயணிக்க கட்டணம் அறவிடும் நடைமுறையை அமுல்ப்படுத்த திட்டமிட்டுள்ளது.

அரசாங்கம் விரைவில் வீதிப் பராமரிப்பு நிதியை உருவாக்கவுள்ளாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அனைத்து பிரதான மற்றும் மாகாணங்களுக்கிடையிலான சாலைகளையும் கட்டணச் வீதிகளாக மாற்ற ஆரம்ப நிதியாக ரூ.100 மில்லியன் ஒதுக்கப்படவுள்ளது.

முறையான வீதிப் பராமரிப்பை உறுதி செய்வதற்கும், வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்புக்காக அரசாங்கம் மேற்கொள்ளும் பாரிய செலவினங்களைக் குறைப்பதற்கும் ஏனைய நாடுகளுக்கு இணையாக வீதிப் பராமரிப்பு நிதியை நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குணவர்தன தெரிவித்துள்ளார்.

வீதிப் பராமரிப்பு நிதியம் நிறுவப்பட்ட பிறகு, வீதியைப் பயன்படுத்துபவர்கள்- முக்கியமாக வாகன ஓட்டிகள் வீதிகளைப் பயன்படுத்துவதற்கு முன்னரே தீர்மானிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

கிராமப்புற மற்றும் மாகாணங்களுக்கு இடையேயான சாலைகளின் சாலை கட்டுமானம் மற்றும் பராமரிப்புக்கான 2022 இல் பட்ஜெட் ஒதுக்கீடு ரூ.375 பில்லியன். இது அதிவேக நெடுஞ்சாலைகளை நிர்மாணிப்பதற்கான ஒதுக்கீட்டை விட அதிகமாகும்.

வீதிப் பராமரிப்பு நிதியம், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் ஸ்தாபிக்கப்படும். இதன்மூலம், ஏற்கனவே உள்ள வீதிகளை பராமரித்து புதுப்பிக்கவும் மற்றும் புதிய வீதிகள் மற்றும் பாலங்கள் நிர்மாணிக்கப்படும். வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் இப்போது 25,000 கிலோமீற்றர் கிராமப்புற, மாகாணங்களுக்கு இடையேயான வீதிகள் மற்றும் முக்கிய நெடுஞ்சாலைகள் உள்ளன.

ஆட்சியாளர்களின் முறையற்ற நிர்வாகத்தால், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் தற்போது நாட்டில் வீதி அபிவிருத்தி பணிகள் நடப்பதில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# இலங்கைக்கு எதிரான கடன் வழக்கை தள்ளுபடி செய்தது அமெ. நீதிமன்றம்!

நியூயோர்க், ஏப். 11

இலங்கைக்கு எதிரான ஹமில்டன் ரிசர்வ் வங்கியின் கடனாளி வழக்கை நிராகரிப்பதற்கான இலங்கையின் கோரிக்கையை நியூயோர்க் மாவட்ட நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

ஹமில்டன் ரிசர்வ் வங்கி இலங்கையின் சர்வதேச இறையாண்மை பத்திரங்களில் 250 மில்லியன் டொலருக்கும் அதிகமான சொத்துக்களை வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

கடந்த ஜூலை மாதம் முதிர்ச்சியடைந்த 5.875 சதவீத சர்வதேச இறையாண்மைப் பத்திரங்களின் 1 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு இலங்கை பணம் மற்றும் வட்டியை செலுத்தாமை காரணமாக நியுயோர்க் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்த ‘ஹமில்டன் ரிசர்வ்’ வங்கி, அதன் பத்திரங்களுக்கான வட்டி மற்றும் பணத்தை ஒரே நேரத்தில் செலுத்துவதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு நீதிமன்றத்தை கோரியது.

செப்ரெம்பர் 21, 2022 அன்று, ஹமில்டன் ரிசர்வ் வங்கியின் கடன் பத்திரத் தவறுக்காக தாக்கல் செய்யப்பட்ட புகாரை நிராகரிக்க இலங்கை அரசாங்கம் ஒரு மனுவை தாக்கல் செய்தது.

ஒரு வங்கியால் தொடங்கப்பட்ட வழக்கு “நெருக்கடியில் உள்ள ஒரு தேசத்தின் மீது செல்வாக்கு பெறுவதற்கும் மற்ற சர்வதேச கடன் வழங்குநர்களை விட முன்னேறுவதற்கும் வெளிப்படையான முயற்சி” என்று கூறி, நாட்டின் கடன் திருப்பிச் செலுத்தாதது தொடர்பாக நியூயோர்க்கில் உள்ள வழக்கை தள்ளுபடி செய்யுமாறு இலங்கை அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

கரீபியன் தீவுகளான செயின்ட் கிட்ஸ் மற்றும் நெவிஸில் அமைந்துள்ள ஹாமில்டன் ரிசர்வ் வங்கி, 1 பில்லியன் டொலர் இறையாண்மைப் பத்திரத்தைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால் சட்ட நடவடிக்கையைத் தொடங்கியது.

5.875 வீத சர்வதேச இறையாண்மைப் பத்திரங்கள் ஜூலை 25, 2022 அன்று செலுத்தப்படவேண்டும்.

நீதிமன்ற பதிவுகளின்படி, ஹமில்டன் ரிசர்வ் வங்கி பத்திரங்களின் நிபந்தனைகளின் கீழ் மொத்தம் 257,539,331.25 அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு செலுத்த வேண்டியுள்ளது. அசல் 250,190,000 டொலர்கள். வட்டி 7,349,331.25 டொலர்கள்.

நியூயோர்க் தெற்கு மாவட்ட நீதிமன்ற நீதிபதி டெனிஸ் கோட், இலங்கை அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்ட நிறுவனம் தாக்கல் செய்த மனுவை மார்ச் 24 அன்று தள்ளுபடி செய்தார்.

எனவே, நிலுவைத் தொகையை இலங்கை அரசு உடனடியாக செலுத்த வேண்டுமா என்பதை முடிவு செய்ய வழக்கு தொடரும்.

(அ)

# போதைமாத்திரையுடன் கைதாகிய மாணவர்களுக்கு உளவள சிகிச்சை

## யாழ்.விஞ்ஞான பீடாதிபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 11

**தடை செய்யப்பட்ட போதை மாத்திரைகளை உட்கொண்டார்கள் என்ற சந்தேகத்தில் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்ட பல்கலைக் கழக மாணவர்களை உளவளத் துணைச் சிகிச்சைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் பு. ரவிராஜன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணம் - கந்தர்மடம், பழம் றோட்டுப் பகுதியில் உள்ள தனியார் மாணவர் விடுதி ஒன்றில் தங்கியிருந்த சமயம், பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போது, தடை செய்யப்பட்ட போதைமாத்திரைகளை உட்கொண்டமை மற்றும் போதை மாத்திரை வெற்று உறைகள் கைப்பற்றப்பட்டமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டுப் பின்னர் பல்கலைக்கழக அதிகாரிகள் முன்னிலையில் விடுவிக்கப்பட்ட மாணவர்களில், போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் சில மாணவர்களை உளவளத் துணை சிகிச்சைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள பல்கலைக்கழக ஒழுக்காற்று உத்தியோகத்தர்களின் சிபார்சின் அடிப்படையில், சந்தேகத்தின் பேரில், போதைக்கு அடிமையாகி இருக்கக் கூடும் எனச் சந்தேகிக்கப்படும் மாணவர்களைத் தேவையான உளவளத் துணைச் சிகிச்சைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், சம்பவத்துடன் தொடர்புபட்டிருந்த மாணவர்களின் பெற்றோர்களும் நேரடியாக அழைக்கப்பட்டு விளக்கமளிக்கப்படவுள்ளது என்றும், சம்பவம் தொடர்பில் பொலிஸார் எடுக்கும் எந்தச் சட்ட நடவடிக்கைளிலும் பல்கலைக்கழகம் குறுக்கிடாது என்றும் அவர் கூறினார்.

விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட மாணவர்கள் அனைவருக்கும் பல்கலைக்கழகத்தில் பரீட்சைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால், அவர்கள் நேற்று முன் தினமே விடுவிக்கப்பட்டிருந்தனர்.

எனினும், மாணவர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் தேவையான புனர்வாழ்வு நடவடிக்கைகளைப் பல்கலைக்கழக மட்டத்தில் மேற்கொள்ளவேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலேயே அவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதனையடுத்து சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்ட மாணவர்கள் நேற்று நண்பகல் பரீட்சை முடிவடைந்த பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிறுநீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களில் இருவர் மாத்திரமே போதை மாத்திரை உட்கொண்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள வைத்தியசாலை வட்டாரங்கள், இனங்காணப்பட்ட மாணவர்களுக்கு போதையிலிருந்து மீள்வதற்கான சிகிச்சைகள் வழங்கப்படும் என்று தெரிவித்தன.

(அ)

# புதுவருட தினத்தில் மரக்கன்று நடுமாறு சுற்றுச்சூழல் அதிகார சபை கோரிக்கை!

கொழும்பு, ஏப். 11

புத்தாண்டினை முன்னிட்டு ஒரு செடியை நட்டு, சுற்றுச்சூழலுக்கு பங்களிக்குமாறு சுற்றுச்சூழல் அதிகார சபை மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இத்திட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் அமுலில் இருக்கும் என சுற்றுச்சூழல் அதிகார சபை அறிவித்துள்ளது.

அதன்படி, மருத்துவ செடிகள், பழ மரங்கள் என்பவற்றை நாட்டி இதன்போது எடுக்கப்பட்ட புகைப்படத்தை சுற்றுச்சூழல் அதிகார சபை அனுப்பலாம்.

011 2 87 23 59 அல்லது 011 2 87 22 78 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பதன் மூலம் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மரங்களை நட்டு ஓராண்டு நிறைவடைந்த நிலையில் கணக்கெடுப்பு நடத்தி, மரங்களை முறையாக நட்டு பராமரித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

# வெளிநாட்டு கடன் சீரமைப்பு ஜூன் மாதம் நிறைவடையும்

கொழும்பு, ஏப். 11

இலங்கையின் உள்ளக மற்றும் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு இந்த ஆண்டு ஜூன் மாத இறுதிக்குள் முடிக்கப்படும் என மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் மீளாய்வு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் அதற்கு முன்னர் மறுசீரமைப்புப் பணிகளை முடிக்க முடியும் என மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இணையத்தள கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

(அ)

# மக்களை ஏமாற்றும் பிரசாரத்தை அரசாங்கம் மேற்கொள்கின்றது

## முஜிபுர் ரகுமான் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 11

அரசாங்கம் பொதுமக்களை ஏமாற்றும் பிரசாரத்தை மேற்கொண்டு வருவதாக கொழும்பு மேயர் பதவிக்கு போட்டியிடுவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்த முஜிபுர் ரகுமான் தெரிவித்தார்.

சில எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தில் சேர முயற்சிப்பதாக ஆளும்கட்சி உறுப்பினர்கள் பலர் கூறுவதில் உண்மையில்லை என முஜிபுர் ரகுமான் கூறினார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பிலான சர்ச்சைகளும், மத்திய வங்கி தொடர்பான சட்டமூலம் குறித்த குற்றச்சாட்டுகள் அரசாங்கம் நெருக்கடியில் உள்ளதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் 54 பாராளுமன்ற உறுப்பினர்களில் நான்கு பேர் இதுவரை ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

டயானா கமகே, ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார மற்றும் அரவிந்த் குமார் ஆகியோர் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மகிந்தவைச் சந்திக்கவில்லை மறுக்கிறார் உதய கம்மன்பில

கொழும்பு, ஏப். 11

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்‌ஷவுடன் அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தியதாக வெளியான தகவலை பிவித்துரு ஹெல உறுமய தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில மறுத்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி மற்றும் இலாபம் ஈட்டும் அரச நிறுவனங்களை தனியார் மயமாக்கும் நடவடிக்கை குறித்து மகிந்த ராஜபக்‌ஷவுடன் கலந்துரையாடவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஒரு வருடமாக தான் முன்னாள் ஜனாதிபதியை சந்திக்காத நிலையில் தானும் விமலும் சந்தித்ததாக வெளியாகிய இவ்வாறான செய்திகள் ஆதாரமற்றவை என்றும் உதய கம்மன்பில தெரிவித்தார்.

பொய்களை பரப்புவதன் மூலம் உண்மையான பிரச்சினைகளில் இருந்து மக்களின் கவனத்தை திசை திருப்ப முயற்சிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில குற்றம் சாட்டினார்.

யுகதனவி ஒப்பந்தத்திற்கு எதிராக நீதிமன்றத்தை நாடியதையடுத்து 2022 மார்ச் மாதம், அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, கம்மன்பில மற்றும் வீரவன்ஸ இருவரும் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

# உலக வங்கி, நாணய நிதியக் கூட்டங்களில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் ஷெகான்!

கொழும்பு, ஏப். 11

உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வசந்த கால கூட்டத்தில் இலங்கையை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க கலந்து கொள்ளவுள்ளார்.

10 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை வொஷிங்டன் டிசியில் இந்த கூட்டங்கள் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



இந்தக் கூட்டங்களில் கலந்துகொள்ள ஆவலுடன் காத்திருப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

கடன் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கும், பொருளாதார மீட்சியை நோக்கி நாடு அடைந்துள்ள முன்னேற்றத்தை மேலும் மேம்படுத்துவதற்கும் சர்வதேச பங்காளிகளுடன் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு இலங்கைக்கு இது ஒரு சிறந்த வாய்ப்பாக இருக்கும் என்று அவர் கூறினார்.

(அ)

# போலி நாணயத்தாள்களின் புழக்கம் நாட்டில் அதிகரிப்பு

## மக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 11

புத்தாண்டு காலத்தில் போலி நாணயத்தாள்களின் புழக்கம் அதிகரித்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

எனவே இந்த விடயம் தொடர்பாக பொது மக்கள் கவனம் செலுத்துமாறு பொலிஸ் தலைமையகம் கோரிக்கை விடுத்துள்ளது.

வர்த்தகர்கள் இந்த நாணயத்தாள்கள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கேட்டுள்ளார். (அ)

# பயங்கரவாதத்துக்கெதிரான புதிய சட்டமூல வரைவு: ஆரம்ப அவதானிப்புகள்!



எர்மிஸா டேகல்

வழங்குகின்றது. இம்மொத்த ஏற்பாடுமே நியாயமற்றதா கவும் அசாதாரணமாகவுமே காணப்படுகின்றது.

பிரிவு 71ன் படி, சட்டமா அதிபருக்கு இச்சட்ட மூல வரைபின் கீழ் குற்றவழக்கு பதியப்பட்ட ஒருவரின் குற்ற வழக்கை அதிகபட்சமாக 20 வருடங்களுக்கு ஒத்திவைக் கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபரால் மேல்நீதிமன்றத்தின் தண்டனை வழங்கும் ஆணையை மீளப் பெற்று பின்வரும் நிபந்தனைகளின் கீழ் ஒத்திவைக்க முடியும்: கழிவிரக்கத்தையும் மன்னிப்பையும் பகிரங்கமாக வெளிப்படுத்துதல், பலிக்குட்படுத்தப்பட்டோருக்கான இழப்பீட்டை வழங்குதல், குறித்துரைக்கப்பட்ட புனர் வாழ்வு நிகழ்ச்சியொன்றில் பங்குபற்றல், இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிவதிலிருந்து தவிர்ந்திருப்ப தென அந்நபர் பகிரங்கமாகப் பொறுப்பேற்றல், குறித்து ரைக்கப்பட்ட சமூக சேவையில் ஈடுபடுதல், ஏதேனும் குற்றம்பகரும் தவறை அல்லது சமாதானக் குலைவைப் புரிவதிலிருந்து தவிர்ந்திருத்தல். இவ்வாறான நிபந்தனைகள் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களை குற்றத்துக்கு ஒப்புக் கொள்வதன் மூலம் இழுபறி நிலையில் போகும் தடுத்து வைத்தல் மற்றும் குற்றவழக்குகளை தவிர்க்க முடியுமென்ற நிலைக்கு கொண்டுவரச்செய்யும் ஏற்பாடாகவே கொள்ள முடியும்.

பிரிவு 82ன் படி தடைசெய்தற் கட்டளைகள் ஜனாதி பதியால் வழங்கப்படுவனவாகும். ஏதேனும் ஒரு இயக்கம், முன்மொழியப்பட்டுள்ள இச்சட்டமூலத்தில் குறிபிடப்பட்டுள்ள குற்றச்செயல்களை புரிந்ததான முகாந்திரத்தின் அடிப்படையிலோ, தேசிய பாதுகாப்புக்கு அல்லது ஏனைய நாடுகளின் பாதுகாப்புக்கு பங்கம் விளையும்படி நடப்பதாகவோ அறியப்படின் ஜனாதிபதியால் அவ்வ மைப்பானது தடைசெய்தற் கட்டளையின் மூலம் தடைசெய்யப்படலாம். இதன் விளைவாக யாரும் அவ்வமைப் பின் அங்கத்தவராக மாறுவதிலிருந்தும், அவ்வமைப்பா னது யாரையும் அங்கத்தவராக ஆக்குவதிலிருந்தும், அவ் வமைப்பின் குறிக்கோள்களுக்கேற்ப யாரும் நடப்பதிலி ருந்தும், கூட்டங்களையோ செடற்பாடுகளையோ கூட்டுவதிலிருந்தும் நடத்துவதிலிருந்தும், வங்கிக்கணக்குகளை பேணுவதிலிருந்தும் நிதிசார் செயற்பாடுகளில் ஈடுபடுவதிலிருந்தும், உடன்படிக்கைகளில் ஈடுபடுவதிலிருந்தும், நிதிசேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதிலிருந்தும், நிதி மாற்றீடுகளில் ஈடுபடுவதிலிருந்தும், அவ்வமைப்பின் பேரில் ஆதரவு திரட்டும் செயற்பாடுகளில் ஈடுபடுவதிலி ருந்தும், அவ்வமைப்பின் குறிக்கோளகளைக் கொண்டு மேற்கொள்ளப்படும் வெளியீடுகள் குறித்தும் தடைசெய் தற் கட்டளைகளை வழங்கலாம். பிரிவு 82(7)(அ) படி தடைசெய்தற் கட்டளை ஆரம்பத்தில் ஒரு வருடத்திற்கு நீடிக்கப்படலாம். பின்னர் ஒவ்வொரு வருடமும் நீடிக்கப் படலாம்.

பிரிவு 83ன் படி வழங்கப்படும் மட்டுப்படுத்தற்கட்டளைகளை ஜனாதிபதி மேல் நீதிமன்றத்தில் விண்ணப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள அதிகாரமளிக்கப்பட்டுள்ளார். இதன் உப பிரிவின் படி, மட்டுப்படுத்தற் கட்டளையானது, (அ) வதிவிடத்துக்கு வெளியேயான நடமாட்டம் (ஆ) வெளிநாடுகளுக்குப் பயணஞ்செய்தல் (இ) இலங்கையினுள் பயணஞ்செய்தல் (ஈ) வதிவிடத்துக்கும் தொழிலிடத்துக்கும் இடையேயான வழமையான மார்க்கத்துக்கு வெளியே பயணஞ்செய்தல் (உ) கட்டளையிற் குறித்துரைக்கப்படவேண்டியவாறான குறிப்பிட்ட ஆட்களுடனான தொடர்பாடல் அல்லது சேருகை அல்லது இரண்டும் அல்லது (ஊ) இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிவதனை வசதிப்படுத்தக்கூடிய குறித்த சில குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடுதல் என்பவற்றை குற்றங்களாகக் காண்கின்றது.

ஜனாதிபதி அலுவலகமானது இது தொடர்பில் நீதிமன்றின் மீது நெருக்குவாரம் செய்யும் நிலை உருவாக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். ஒரு குற்றம் நிகழும் வேளையில் அது தொடர்பில் இக்கட்டளையை விண்ணப்பிக்கும் தேவை ஜனாதிபதிக்கு வழங்கப்படத்தேவையில்லை, அவ்விடயம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு நீதிமன்றின் முன் கொண்டுவரப்பட வேண்டியதாகும். பயணத்தடை போன்ற கட்டளைகள் நீதிபதியினால் கொண்டுவரப்பட வேண்டியதாகும். மேலும் இக்கட்டளையால் தடுக்கப்பட்ட நபர்கள் விண்ணப்பிக்க வேண்டிய நீதிமன்ற மேன்முறையீட்டு நீதிமன்றமாகும் - அதாவது புவியியல் ரீதியில் மிக அருகிலிருக்கும் நீதிமன்றமாகும். இதன்மூலம் நீதியை வேண்டும் செயற்பாடு மேலும் கடினமாக்கப்படுகின்றது.

பிரிவு 85(1)இன் படி ஜனாதிபதி தடைசெய்யப்பட்ட பிரதேசங்களை பிரகடனப்படுத்தும் அதிகாரத்தைப் பெறுகிறார். இதன்மூலம் வான்படை அல்லது கரையோர பாதுகாப்புப்படையின் இயக்குனரின் பரிந்துரையின்படி நேரத்துக்கு நேரம் எப்பிரதேசத்தையும் தடைசெய்யப்பட்ட பகுதியாக பிரகடனம் செய்யும் அதிகாரத்தை இவ்வர்த்தமானி மூலம் ஜனாதிபதி பெறுகின்றார். இதன்மூலம் தடைசெய்யப்பட்ட பகுதிகளில் உள்நுழையும் அனுமதி, புகைப்படங்களை எடுக்கும் அனுமதி, காணொளி அல்லது திட்ட உருவரைகளை உருவாக்கும் அனுமதி போன்றன தடைசெய்யப்படலாம். கால வரையறை குறிப்பிடப்படாததால் இக்கட்டளை நிரந்தரமானதாக மாறும் அபாயமும் உள்ளது. இவ்வேற்பாடானது, பொதுமக்களை குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு உள்நுழைய அனுமதி மறுக்கும் கட்டளைகளைப் பெற பொலிஸார் நீதிமன்றங்களுக்குச் செல்லும் நிலையை இல்லாமலாக்கி இவ்வாறான கட்டளைகள் பொது அமைதியை குலைக்கும் நடவடிக்கைகளுக்கெதிரான ஏற்பாடாக காட்டும் முயற்சியாக நீதிமன்றங்களுக்குக் காட்டுவதாக கொள்ளப்படலாம். இது யுத்த காலத்தில் நடைமுறையில் இருந்த உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு ஒப்பான ஏற்பாடாகக் காணப்படுகின்றது.



பிரிவு 71இன் படி சட்டமா அதிபரின் பரிந்துரையின் படி குற்றவழக்குகள் ஒத்திவைக்கப்பட்டவர்கள் மற்றும் பிரிவு 77இன் படி குற்றப்பத்திரங்கள் சுமத்தப்பட்டவர்களின் மீது பிரிவு 100(1)ன் படி ஜனாதிபதி புனர்வாழ்வு செயற்றிட்டங்களுக்கான ஒழுங்குமுறைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்தும் அதிகாரத்தை பெறுகின்றார். இதன் மூலம் அரசாங்கம் ஏற்கனவே கடைபிடித்து வந்த நடைமுறைக்கான நியாயப்பாட்டை வழங்கவும் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் உடனடியான விடுதலைக்காக புனர்வாழ்வை தெரிவுசெய்ய பலவந்தப்படுத்தும் நிலைக்குக் கொண்டுவரும் ஏற்பாடாகவுமே இப்பிரிவை கொள்ளலாம். இம்முறை மூலம் சட்டமா அதிபர் ஒரு சந்தேக நபரின் மீது வழக்குத்தொடராத போதும் அந்நபர் தண்டனைக்கு உள்ளாக்கப்படும் அல்லது "கட்டுப்படுத்திவைக்கப்படும் அபாயம் ஏற்படுகின்றது. அதாவது, பயங்கரவாதம் என்ற பரந்தளவிலான வரைவிலக்கணத்தினால் காரணமே இல்லாமல் கைதுசெய்யப்பட்ட ஒருவர் உடனடியான விடுதலைக்காக குற்றத்தை ஒப்புக்கொண்டு புனர்வாழ்வை தெரிவுசெய்யும் நிலைக்கு ஒருவர் தள்ளப்படுகின்றார்.


முன்மொழியப்பட்டுள்ள இச்சட்டமூலத்தின் கட்டளைகள் - அறிவுறுத்தல்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட தன்னிச்சையான கைது, தடுத்துவைப்பு மற்றும் ஏனைய அபாயங்களுக்கு உள்ளாக்கப்பட்ட குற்றமற்ற பிரஜையொருவருக்கான எவ்வித இழப்பீடும் இவ்வரைபில் அறிமுகப்படுத்தப்படவில்லை. இதன்மூலம் பிரஜைகள் இச்சட்டமூலத்தின் பயன்பாட்டால் பாரிய சிக்கலுக்குள் தள்ளப்படுகின்றார்கள்.

ஈழநாடு



# ரணில் ஏன் இப்படிச் செய்கிறார்?

நிலாந்தன்




வெடுக்குநாறி மலையில் சிவனாலயம் சிதைக்கப்பட்டமை, கன்னியா வெந்நீர் ஊற்று விவகாரம், கச்சதீவில் புத்தர் சிலை, நெடுந்தீவில் வெடியரசன் கோட்டை விவகாரம், புல்மோட்டையில் முஸ்லிம்களின் பிரதேசத்தில் புத்தபிக்குவின் அட்டகாசம், இவற்றோடு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை புதிய வடிவத்தில் புதுப்பிக்க முற்படுவது போன்ற அனைத்தும் எப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தில் நிகழ்கின்றன?

முதலாவதாக, ஜெனிவா கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கும் ஒரு காலகட்டம். கடந்த நான்காம் திகதிதான் ஜெனிவா கூட்டத் தொடர் முடிவுக்கு வந்தது. இரண்டாவதாக, இரண்டு முக்கிய அமைச்சர்கள் தென்னாபிரிக்காவுக்கு போய் வந்த ஒரு காலகட்டம். அந்நாட்டின் நல்லிணக்க அனுபவங்களை கற்றுக் கொள்வதே அந்த விஜயத்தின் நோக்கம். அதன்பின் இந்த வாரம் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவுக்கான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது, ஐ.எம்.எஃப்பின் உதவி உறுதி செய்யப்பட்ட ஒரு காலகட்டம்.

தொகுத்துப் பார்த்தால் இப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தில் அரசாங்கம் அதிகம் அடக்கி வாசிக்க வேண்டும். குறிப்பாக மேற்கத்திய நாடுகளுக்கு நல்ல பிள்ளை வேடம் போடவேண்டும். ஆனால் நடப்பு நிலைமைகளைத் தொகுத்துப் பார்த்தால், அரசாங்கம் தலைகீழாக நடக்கின்றது. ஏன் அப்படி நடந்து கொள்கிறது?

அதற்கு பின்வரும் காரணங்களைக் கூறலாம். முதலாவது காரணம் ஐஎம்எஃபின் நிபந்தனைகளுக்கு பணிந்து மானியங்களை வெட்டும்போது அல்லது பொது நிறுவனங்களை தனியாரிடம் கொடுக்கும் பொழுது அதனால் ஏற்படக்கூடிய சிங்களப் பொது மக்களின் கோபத்தைத் திசை திருப்புவது. இரண்டாவது காரணம் உதவி வழங்கும் நாடுகளும் நிறுவனங்களும் அந்த உதவியை இனப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்ற முன்நிபந்தனையோடு பிணைத்திருக்கவில்லை என்பது. மூன்றாவது காரணம் தன்னை விட்டால் வேறு தெரிவு உலக சமூகத்திடம் இல்லை என்று ரணில் விக்கிரமசிங்க திடமாக நம்புகிறார்.

இந்த மூன்று காரணங்களின் அடிப்படையில்தான் அண்மை வாரங்களாக அரசாங்கம் தமிழ் மக்களுக்கு கோபமூட்டும் நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது. இதைச் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

ஐஎம்எஃபின் நிபந்தனைகளை ஏற்று மானியங்களை வெட்டும்போது ஏழைகள் கொதித்து எழுவார்கள். பொதுச்சேவை நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்தும் போது தொழிலாளர்கள் கொதித்து எழுவார்கள். அதிகம் சம்பாதிப்பவர்களுக்கு வருமான வரி விதிக்கும்போது அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்வார்கள். ஏற்கனவே இம்மூன்று தரப்புக்களும் கொதித்துக் கொண்டிருக்கின்றன. அவர்களுடைய நடவடிக்கைகளைத் திசை திருப்புவதற்கு அரசாங்கம் இனவிவகாரத்தை கையில் எடுத்திருக்கிறது. அதன்மூலம் சாதாரண சிங்களமக்களின் கவனத்தை எளிதாகத் திசை திருப்பலாம்.

இது ஒரு புதிய உத்தி அல்ல. ஏற்கனவே முன்னம் இருந்த எல்லா அரசாங்கங்களும் கையாண்ட ஓர் உத்திதான். தென்னிலங்கையில் நெருக்கடி தோன்றும் போது இனவாதத்தை நோக்கி அவர்களுடைய கவனத்தைத் திசை திருப்புவது. தமிழ்மக்கள் பௌத்தமயமாக்கலை எதிர்க்கிறார்கள் அதற்கு எதிராக போராடுகிறார்கள் என்று காட்டினால், சிங்கள மக்களின் கோபம் திசை திருப்பப்பட்டுவிடும்.

இது ஒரு காரணம். அடுத்த காரணம், அரசாங்கத்தை பொருளாதார நெருக்கடியில் இருந்து பிணையெடுக்க முற்படும் தரப்புக்கள் தமது உதவிகளுக்கு இனப்பிரச்சினைக்கான தீர்வை ஒரு நிபந்தனையாக முன்வைக்கவில்லை என்று தெரிகிறது.

அவ்வாறு முன்வைத்திருந்திருந்தால் அரசாங்கம் ஜெனிவாக் கூட்டத்தொடர் நடந்து கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் இவ்வாறு சிங்களபௌத்த மயமாக்கலை முடுக்கி விட்டிருக்காது. பொருளாதார நெருக்கடியில் இருந்து அரசாங்கத்தைப் பிணையெடுக்க முற்படும் வெளித் தரப்புக்கள் குறிப்பாக மேற்குநாடுகளும் இந்தியாவும் ஒரு விடயத்தில் ஒரே விதமாகச் சிந்திக்கின்றன. இப்போதுள்ள நிலைமைகளின்படி ஜேவிபி படிப்படியாக வளர்ந்து வருவதாகக் கருதப்படுகிறது. இடது பண்புடைய ஒரு கட்சி குறைந்தபட்சம் பலமான எதிர்கட்சியாக மேலெழுவதைக்கூட, மேற்படி நாடுகள் விரும்பாது. எனவே ஜேவிபியின் எழுச்சியைத் தடுப்பதற்கு ரணிலைப் பலப்படுத்த வேண்டும். அதனால் நிபந்தனைகளைப் போட்டு அவரைப் பலவீனப்படுத்த மேற்கு நாடுகள் தயாரில்லை.

**வெடுக்குநாறி மலையில் சிதைக்கப்பட்ட சிவனாலயத்துக்கு நீதி கேட்டுத் திரண்ட மக்கள் தொகையை விடவும் நாவற்குழியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள பௌத்த விகாரைக்கு கலசம் வைப்பதற்காக வந்த சிங்கள மக்களின் எண்ணிக்கை அதிகம்**

அதாவது ஜே.வி.பிதான் இப்பொழுது ரணிலுடைய பலம். எப்படியென்றால் ஜேவிபி மற்றும் ஜேவிபியிலிருந்து பிரிந்து சென்ற முன்னிலை சோசலிஸக் கட்சி போன்றன முன்னெடுத்த “அரகலய” போராட்டத்தின் விளைவாகவே ரணிலுக்கு பதவி கிடைத்தது. இப்பொழுது ஜேவிபி பலமடைவதைத் தடுப்பதற்கு ரணிலைப் பலப்படுத்த வேண்டிய தேவை மேற்கு நாடுகளுக்கும் மேற்கத்திய நிதி முகவர் அமைப்புகளுக்கும் இந்தியாவுக்கும் ஏற்பட்டிருக்கிறது. ஜேவிபி அச்சுறுத்தலான ஒரு சக்தியாக இருக்கும்வரை அவர்கள் ரணிலைப் பலப்படுத்துவார்கள்.

ஒவ்வொரு வெளிநாட்டுக்கும் அதனதன் பயம். இதில் தமிழ்மக்களின் பயத்தை யார் பொருட்படுத்துகிறார்கள்? நாட்டின் பொருளாதார நெருக்கடியை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு வாய்ப்பாக பயன்படுத்த வேண்டும் என்று தமிழ் மக்கள் கேட்கக்கூடும். ஆனால் பிராந்தியப் பேரரசுகளும் உலகப் பேரரசுகளும் அதனை தமக்குக் கிடைத்த ஒரு ராஜதந்திர வாய்ப்பாகக் கருதிக் கையாள்வதாகத் தெரிகிறது. இலங்கை நொடிந்து போயிருக்கும் காலகட்டத்தில் உதவிகளின்மூலம் இலங்கையை எப்படித் தம்வசப்படுத்தலாம் என்றுதான் எல்லாப் பேரரசுகளும் சிந்திக்கின்றன. ஏற்கனவே சீனாவின் கடன் பொறிக்குட் சிக்கியிருக்கும் ஒரு நாட்டை எப்படி ஐஎம்எப்பின் கடன்பொறிக்குள் வீழ்த்துவது என்று மேற்குநாடுகள் சிந்திக்கின்றன. இப்படியாக பேரரசுகள் இலங்கைத்தீவின் பொருளாதார நெருக்கடியை ஒரு ராஜதந்திர வாய்ப்பாக பயன்படுத்த தொடங்கினால்,உதவிகளையும் இனப்பிரச்சனைக்கான தீர்வையும் ஒன்றுடன் ஒன்று பிணைப்பதற்கான வாய்ப்புகள் மேலும் பலவீனமடையும்.

மேலும், ரணில் மேற்கத்தியப் பாரம்பரியத்தில் வந்த ஒரு தலைவர். ஐஎம்எஃப் போன்ற நிறுவனங்களை ஏற்கனவே கையாண்டவர். எனவே ஏற்கனவே பரிச்சயமான ஒருவரோடு விவகாரங்களை கையாள்வது இலகுவானது என்றும் மேற்கு நாடுகளும் ஐ.எம்.எஃப்பும் கருதக்கூடும். அதனால் நாட்டில் இப்போதுள்ள நிலைமைகளில் ஒப்பீட்டளவில் ரணில் பரவாயில்லை என்று மேற்கு நாடுகள் கருதுவதாகத் தெரிகிறது.

அதுமட்டுமல்ல, ராஜபக்சக்களைப் பொறுத்தவரை ரணிலை விட்டால் வேறு பாதுகாப்புக் கவசம் இல்லை. வேறு பொருத்தமான பினாமியும் இல்லை. ராஜபக்சக்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மதிப்பிழந்து காணப்படுகிறார்கள். எனவே அவர்கள் தங்களைப் பலப்படுத்திக் கொள்ளும்வரை குறிப்பாக நாமல் ராஜபக்சவை அடுத்த தலைவராகக் கட்டியெழுப்பும்வரை நிலைமைகளைக் கையாள்வதற்கு ஒப்பீட்டளவில் பொருத்தமான பினாமி ரணில்தான். இப்படிப் பார்த்தால், உள்நாட்டில் ராஜபக்சங்களுக்கு பொருத்தமான பினாமி ரணில்தான். வெளியே மேற்கத்திய நாடுகளுக்கும் ஐஎம்எஃப்பிற்கும், உலக வங்கிக்கும் ரணில் ஒப்பீட்டளவில் பரவாயில்லை. எனவே உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனக்கு இப்பொழுது மவுசு அதிகரித்து வருவதை ரணில் உணர்கிறார். மேலும் கடந்த மாதத்தோடு அவருக்கு நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரமும் கிடைத்துவிட்டது.

எனவே, நிறைவேற்று அதிகாரம், மேற்கத்திய ஆதரவு, ராஜபக்சக்களின் தங்கு நிலை,ஆழங்காண முடியாத தந்திரம், வாழ்வின் இறுதிக் கட்டத்திலாவது சாதிக்க வேண்டும் என்ற ஆவேசம் போன்ற எல்லாவற்றினதும் கூட்டுக் கலவையாக அவர் காணப்படுகிறார்.

உள்நாட்டில் தனக்கு மக்கள் ஆணை இல்லை என்பதும் தனது கட்சி பெருமளவுக்குச் சிதைந்து போய்விட்டது என்பதும் அவருக்குத் தெரிகிறது. பொருளாதாரத்தை ஒப்பீட்டளவில் நிமிர்த்தினால் தான் தன்னையும் நிமித்தலாம், தனது கட்சியையும் நிமிர்த்தலாம், சஜித்தையும் உடைக்கலாம் என்று அவருக்குத் தெரியும். பொருளாதாரத்தை நிமிர்த்துவது என்றால் மேற்கு நாடுகளின் நிபந்தனைகளுக்கு ஒத்துப்போக வேண்டும். மேற்கின் நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிவதென்றால் உள்நாட்டில் எதிர்ப்புகள் எழும். அந்த எதிர்ப்பைத் திசைதிருப்ப அவருக்கு இனவாதம் தேவை. அதைத்தான் அவர் செய்கிறார். அதுவும் ஜெனிவாக கூட்டத்தொடர் காலகட்டத்திலேயே செய்கிறார். ஆனால் தமிழ் மக்களோ அதற்கு எதிராகக் காட்டிய எதிர்ப்பு ஒப்பீட்டளவில் பலவீனமானது. வெடுக்குநாறி மலையில் சிதைக்கப்பட்ட சிவனாலயத்துக்கு நீதி கேட்டுத் திரண்ட மக்கள் தொகையை விடவும் நாவற்குழியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள பௌத்த விகாரைக்கு கலசம் வைப்பதற்காக வந்த சிங்கள மக்களின் எண்ணிக்கை அதிகம் என்று யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு செய்தியாளர் சொன்னார்.

சிங்களபௌத்த மயமாக்கலுக்கு எதிராக தமிழ்மக்கள் பலமான ஒரு திரட்சியைக் காட்டமுடியாமல் இருக்கிறார்கள். இதுவும் அரசாங்கத்துக்குத் துணிச்சலை கொடுக்கிறது.

ஒருபுறம் தென்னாபிரிக்கப் பாணியில் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஓர் ஆணைக் குழுவை உருவாக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது. இன்னொருபுறம் ஜெனிவா கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கும் பொழுதே தமிழ் மக்களே கோபப்படுத்துகின்றது.

ஒருபுறம் ஐ.எம். எஃப்பின் நிபந்தனைகளை நிறைவேற்றுகிறது. இன்னொருபுறம் அதற்கு எதிராகக் கிளர்ந்து எழும் சிங்களமக்களைத் தமிழ் மக்களின் மீது திருப்பி விடுகிறது. ஒரு பிரச்சினையை இன்னொரு பிரச்சினையால் அடித்து விடுவது. அல்லது ஒரு புதிய பிரச்சினையை உருவாக்கி அதன் மீது மக்களின் கவனத்தைத் திசைதிருப்புவது. ஆகமொத்தம் ரணில் விக்ரமசிங்க அடுத்த ஜனாதிபதியாக வருவது என்று தீர்மானித்து உழைக்க தொடங்கி விட்டார். ●

# மன்னாரில் குடும்ப சண்டை மோதலில் ஒருவர் மரணம்!

## 5 பேர் வைத்தியசாலையில்

மன்னார், ஏப். 11

**மன்னார் - சாந்திபுரம் பகுதியில் இரு குடும்பங்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.**

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில், எமில் நகர்ப் பகுதியைச் சேர்ந்த 34 வயதான சத்தியா என்பவர் உயிரிழந்துள்ளார். மேலும் ஐவர் காயமடைந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நீண்டகாலமாக சாந்திபுரம் பகுதியில் இரு குடும்பத்திற்கு இடையில் நிலவி வந்த பிரச்னை பொலிஸ் வரை சென்று சமாதானப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு குறித்த இரு குடும்பத்திற்கு இடையில் மீண்டும் பிரச்னை ஏற்பட்ட நிலையில் முரண்பாடு முற்றியுள்ளது.

இதன்போது, பலர் இணைந்து கூரிய ஆயுதங்களால் தாக்குதல் நடத்தியதில் எமில் நகர்ப் பகுதியைச் சேர்ந்த 34 வயதான சத்தியா என்ற நபர் மரணமடைந்துள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த பெண் ஒருவர் உட்பட ஐவர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொலை செய்ததாகக் கூறப்படும் சந்தேக நபர்கள் தலைமறைவாகியுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# யாழில் ஆலயத்தில் திருடிய உதவி பூசகர்



யாழ்ப்பாணம், ஏப். 11

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் ஆலயத்தில் இரண்டு லட்சம் ரூபாய் பெறுமதியான பித்தளை விளக்குகள் உட்பட்ட பித்தளைப் பொருட்கள் திருட்டு போனதாக ஆலயத்தினரால் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது

இதனடிப்படையில் மானிப்பாய் பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளின்போது ஆலய உதவிப் பூசகர் ஒருவரை சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்து விசாணைகளை முன்னெடுத்த நிலையில் அவர் இரும்பு வியாபாரிக்கு குறித்த பொருட்களை விற்பனை செய்திருந்தமை தெரியவந்தது.

இதனையடுத்து யாழ்பாணம் பகுதியினை சேர்ந்த இரும்பு வியாபாரியொருவரை சந்தேகத்தின் அடிப்படையில் மானிப்பாய் பொலிசார் கைது செய்ததோடு குறித்த திருட்டு பொருட்களையும் கைப்பற்றி சட்டநடவடிக்கைகளுக்கு உட்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# புத்தாண்டை முன்னிட்டு வவுனியாவில் வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனை

வவுனியா, ஏப். 11

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு அமைச்சின் உத்தரவுக்கமைய வவுனியா வர்த்தக நிலையங்களில் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த சோதனை நடவடிக்கை அளவைப் பிரிவினரால் நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா இலுப்பையடி, சந்தை உள்வட்ட வீதி, கண்டி வீதி, பழைய பேரூந்து நிலையம், நெளுக்குளம், பசார் வீதி ஆகிய பகுதிகளிலேயே இந்த திடீர் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறிப்பாக வவுனியாவில் உள்ள சதோச விற்பனை நிலையம், காகில்ஸ் பூட்சிற்றி மற்றும் தனியார் பல்பொருள் விற்பனை நிலையங்கள், மரக்கறி விற்பனை நிலையங்கள் என்பவற்றில் இவ் விசேட சோதனை நடந்துள்ளது.

இதன்போது நிறுத்தல் தராசுகள் முத்திரையிடப்பட்டுள்ளதா, நிறுத்தல் அளவைகள் சரியாக உள்ளனவா, பொதி செய்யப்பட்ட பொருட்களின் நிறுத்தல் அளவைகள் சரியானவையா என்பது குறித்து அதிகாரிகளினால் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டிருந்தது. (அ)

# உணவுப் பணவீக்கம் வீழ்ச்சி

கொழும்பு, ஏப். 11

இலங்கையின் உணவுப் பணவீக்கம் வீழ்ச்சியடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள சமீபத்திய அறிக்கையின் படி இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, உலகில் அதிக உணவுப் பணவீக்கம் உள்ள நாடுகளில் இலங்கை 10ஆவது இடத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த ஆண்டு செப்ரெம்பரில், பணவீக்கம் உச்சத்தில் இருந்தபோது, சிம்பாப்வே மற்றும் லெபனானுக்கு அடுத்தபடியாக இலங்கை இருந்தது.

உணவுப் பணவீக்க விகிதம் 59 வீதத்துடன் இலங்கை, பட்டியலில் பத்தாவது இடத்தில் உள்ளதாக உலக வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன. (அ)





# சூனிய அரசியலே கையேந்த வைத்தது

## கூறுகின்றார் அமைச்சர் டக்ளஸ்

அக்கரைப்பற்று, ஏப். 11

**கடந்தகால சூனிய அரசியல் மக்களை கையேந்தும் நிலைக்கு கொண்டு சென்றுள்ளது என்று தெரிவித்த கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமுமான கே.என். டக்ளஸ் தேவானந்தா, அதில் இருந்து மக்களை மீட்டெடுத்து சுயமாக கௌரவமாக வாழக்கூடிய எதிர்காலத்தை உருவாக்குவதே தனது நோக்கம் என்று தெரிவித்தார்.**



அம்பாறை மாவட்டத்தில் கடற்றொழில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பில் ஆராயும் பொருட்டு மாவட்டத்துக்கான விஜயமொன்றை மேற்கொண்டார்.

தம்பிலுவில் கனகரெட்ணம் கட்டடத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அமைச்சர் கூறினார்.

மக்கள் சந்திப்பு நிகழ்வு விவசாயப் போதனாசிரியரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் திருக்கோவில் பிரதேச இணைப்பாளர் மு.கங்காதரன் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

நிகழ்வில் கலந்து கொண்ட மக்களினால் அமைச்சரிடம் மகஜர்கள் கையளிக்கப்பட்டதுடன் பொது விடயங்கள் பற்றிய கலந்துரையாடலும் கட்சியின் எதிர்கால பயணம் நிகழ்வு வேலைத்திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன.

இந்த சந்திப்பில், திருக்கோவில் பிரதேச ஆலயங்களின் நிருவாகத்தினர் சமுக சேவையாளர்கள் விவசாய சங்க உறுப்பினர்கள் பொது மக்கள் கட்சி உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# சிறப்புற நடைபெறும் இப்தார் நிகழ்வுகள்



நிந்தவூர், ஏப். 11

முஸ்லிம்கள் அனுஷ்டித்துவரும் புனித நோன்பையொட்டிய இப்தார் எனப்படும் நோன்பு திறக்கும் நிகழ்வுகள் இம்முறை கிழக்கிழங்கையில் வெகு சிறப்பாக நடைபெற்றுவருகின்றன.

கிழக்கிலங்கையின் பல்வேறு முஸ்லிம் பிரதேசங்களிலும் பள்ளிவாசல்கள், அரச அலுவலகங்கள், வங்கிகள் உட்பட பல்வேறு பொது அமைப்புகளும், தனியாரும் சிறப்புற இப்தார் நிகழ்வுகளை நடத்தி வருகின்றன.

கடந்த மூன்று வருடகாலமாக நாட்டின் நிலமை மற்றும் கொவிட் பரவல் போன்ற காரணங்களால் இந்த வருடாந்த இப்தார் நிகழ்வுகள் சோபை இழந்தும், நடைபெறாத நிலமையும் காணப்பட்டது.

எனினும் நாட்டில் நிலவும் அமைதியான சூழ்நிலை காரணமாக கிழக்கின் பல்வேறு முஸ்லிம் பிரதேசங்களிலும் சிறப்பான பொது நிகழ்வாக இப்தார் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

குறிப்பாக இவ்வாறு நடைபெறும் இப்தார் நிகழ்வுகள் மாற்றுமத சகோதரர்களினதும் பங்குபற்றுதல்களுடன் இனநல்லிணக்க இப்தார் நிகழ்வுகளாகவும் இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அரச அலுவலகங்கள், வங்கிகள் முதலானவற்றில் ஏற்பாடு செய்யப்படும் இப்தார் நிகழ்வுகள் அவற்றில் கடமையாற்றும் சகோதர இன உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் பங்குபற்றுதல் மட்டுமன்றி, பங்களிப்புகளுடனும் இடம்பெற்று வருவது சிறப்பம்சமாக அமைந்துள்ளது.

மேலும் இப்தார் நிகழ்வுகளில் நிகழ்த்தப்படும் சிறப்பு பயான்களில் இன நல்லிணக்கம், நல்லுறவு தொடர்பிலும், ஈகையின் சிறப்புக்கள் தொடர்பிலும் வலியுறுத்தப்பட்டுவரும் அதேவேளை, நாட்டுக்கும், நாட்டு மக்களின் நல்வாழ்வுக்குமான விசேட துஆபிரார்த்தனைகளும் இடம்பெற்றுவருகின்றன.

இதேவேளை சம்மாந்துறை ஹைர் பள்ளிவாசலில், அருகிலுள்ள வீரமுனை தமிழ், கிராம இளைஞர்கள், பொது மக்கள் கலந்து கொண்ட எடுத்துக்காட்டான இப்தார் நிகழ்வு ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

ஏறாவூரில் அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அகமட்டின் ஏற்பாட்டில் மாபெரும் இப்தார் நிகழ்வு ஒன்று நடைபெற்றுள்ளது.

அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அகமட் நேரில் பிரசன்னமாக விருந்து இந்த இப்தார் நிகழ்வை நடத்தினார்.

பெருந்தொகையானோர் இந்த இப்தார் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(அ-06)

# ஓய்வுநிலை அதிபர் கௌரவிப்பு

அக்கரைப்பற்று, ஏப். 11

கல்முனை கல்வி வலய மருதமுனை அல்- மனார் மத்திய கல்லூரி அதிபராக கடமையாற்றி கடந்த வெள்ளிக்கிழமை ஓய்வு பெற்றுச்சென்ற எம்.ஜே.ஏ. ஹஸீப்பை வீடு தேடி சென்று பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும், இப்தார் வைபகமும் கல்முனை வலயக்கல்வி அலுவலக உதவிக்கல்வி பணிப்பாளரும், கல்முனை கோட்ட கல்விப்பணிப்பாளருமான ஏ.பி.பாத்திமா நஸ்மியா சனூஸ் தலைமையில் இடம்பெற்றது.

கல்முனை கோட்ட கல்விப்பணிப்பாளரின் தலைமையில் நடைபெற்ற கோட்ட அதிபர்கள் ஒன்றுகூடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் ஒன்றான 2023 ம் ஆண்டிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்கின்ற அதிபர்களை கௌரவித்தலின் முதல் கட்டமாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹதுல் நஜீம் பிரதம அதிதியாகவும், நிர்வாக பிரதிக்கல்வி பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபீர், கணக்காளர் வை. ஹபிபுல்லாஹ் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர். மேலும் கல்முனை கோட்ட பாடசாலைகளின் அதிபர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (அ)



# கஞ்சாவைக் கடத்தியவர் அதிரடிப்படையால் கைது

அக்கரைப்பற்று, ஏப். 11

மோட்டார் சைக்கிளில் நாட்டு கஞ்சாவினை கடத்திய சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை விசேட அதிரடிப்படையினரின் புலனாய்வு பிரிவினரின் தகவலுக்கமைய அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் இக்கைது இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மண்டூர் பகுதியைச் சேர்ந்தவர். கஞ்சாவைக் கடத்தி செல்வதற்காக தயாராக இருந்தவேளை அம்பாறை மாவட்டம் சவளக்கடை பொலிஸ் பிரிவில் உள்ள வேப்பயடி சந்தியில் வைத்து சந்தேக நபர் மோட்டார் சைக்கிளுடன் கைதானார்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடம் இருந்து தொலைபேசி ஒன்று 1 கிலோ 50 கிராம் பொதி செய்யப்பட்ட கஞ்சா ஒரு தொகைப் பணம் மோட்டார் சைக்கிள் என்பன விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மணாகிப் மஜ்லிஸ் கொடியேற்ற நிகழ்வு



அக்கரைப்பற்று, ஏப். 11

கல்முனை தாறுஸ்ஸபா அமையத்தின் ஏற்பாட்டில் வருடாந்தம் இடம்பெறும் புனித பத்று சஹாபாக்கள் நினைவு தின மணாகிப் மஜ்லிஸ் கொடியேற்ற நிகழ்வும் வருடாந்த இப்தார் வைபகமும் தாறுஸ்ஸபா அமைய பிரதானி மௌலவி உஸ்தாத் ஏ.ஆர். சபா முஹம்மத் தலைமையில் தாறுஸ்ஸபா அமைய தலைமையகத்தில் இடம்பெற்றது

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற இந்நிகழ்வில் புனித பத்று சஹாபாக்கள் நினைவு தின மணாகிப் மஜ்லிசினை தொடந்து கொடியேற்றப்பட்டதுடன் வருடாந்த இப்தார் வைபகமும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உலமாக்கள், முன்னாள் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், பிரதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள், கல்முனை தாறுஸ்ஸபா அமையத்தின் நிர்வாகிகள், கலை, அரசியல், இலக்கிய, ஊடகத்துறை சார்ந்தவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (அ)

# 2 வீடுகளை உடைத்து கொள்ளை ஒருவர் கைது; இருவருக்கு வலை

மட்டக்களப்பு, ஏப். 11

இரு வீடுகளை உடைத்து பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களைத் கொள்ளையடித்தார் என்றக் குற்றச்சாட்டின் கீழ் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் இருவர் தேடப்பட்டு வருகின்றனர்.

இச்சம்பவம் காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள புதிய காத்தான்குடி மற்றும் நதியா கடற்கரை பிரதேசம் ஆகிய இடங்களில் சனிக்கிழமை இடம்பெற்றிருப்பதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எஸ். றஹீம் தெரிவித்தார்.

மீன்பிடி இலாகா வீதியிலுள்ள வீடொன்றின் கதவை உடைத்து 4 பவுண் தங்க நகை 5 இலட்சம் ரூபாய் பணம் என்பவற்றையும் நதியா கடற்கரை பகுதியிலுள்ள தோட்டமொன்றிலுள்ள வீட்டுக் கூரையை உடைத்து உள்ளே இறங்கி மின்விசிறி மெராக்கள், தண்ணீர் ஹீற்றர், வானொலிப் பெட்டி உட்பட பல பொருட்களையும் திருடிச் சென்றுள்ளனர்.

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறியின் வழிகாட்டலில் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எஸ். றஹீம் தலைமையிலான பொலிஸ் குழுவினர் ஒருவரைக் கைது செய்துள்ளதுடன் மேலும் இருவரைத் தேடிவருகின்றனர்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து மின்விசிறி மற்றும் தண்ணீர் இறைக்கும் இயந்திரம் உட்பட சில பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டவுள்ளதாக தெரிவித்த காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# 400 அகதிகளுடன் தத்தளித்த படகு!

சுமார் 400 அகதிகளை ஏற்றிய படகு, உதவிகள் கிட்டாத நிலையில் மோல்டாவிற்கும் லிபியாவிற்கும் இடையில் நடுக்கடலில் மெதுவாக மூழ்கி வருகிறது. மீட்புத் தேவைப்படும் அகதிகளுக்கு உதவும் இணையதளமான அலாரம், இந்த சம்பவம் குறித்து டுவிட்டரில் தெரிவித்தது, படகில் இருந்து தமக்கு இரவு தாமதமாக அழைப்பு வந்ததாகக் கூறியது.

படகில் எரிபொருள் தீர்ந்து விட்டதாகவும், குடியேற்றவாசிகள் தண்ணீரை வெளியேற்றுவதற்கு வாளிகளைப் பயன்படுத்துவதாகவும் அலாரம் கூறியது.

ஒரு கர்ப்பிணிப் பெண் உட்பட பலருக்கு மருத்துவ கவனிப்பு தேவைப்படுகிறது. கப்டன் கப்பலை விட்டு தப்பிச் சென்றுள்ள நிலையில், கப்பலில் இருப்பவர்கள் பீதியடைந்துள்ளனர்.

"கப்பலில் இருந்த கடுமையான நிலைமைகளை ஒரு பெண் எங்களிடம் கூறினார்: கப்டன் கப்பலை விட்டு வெளியேறினார், யாராலும் படகை மீண்டும் இயக்க முடியவில்லை.பலருக்கு ஒரு குழந்தை, கர்ப்பிணிப் பெண் மற்றும் உடல் நலம் பாதிக்கப்பட்ட நபர் உட்பட மருத்துவ பராமரிப்பு தேவைகள் உள் ளன என டுவிட்டரில் தெரிவித்துள்ளது.

பிந்திய நிலவரப்படி, கப்பல் மோல்டோவின் தேடல் மற்றும் மீட்புப் பகுதியில் படகு காணப்பட்டது. ஆனால் மோல்டா அதிகாரிகள் மீட்பு நடவடிக்கையைத் தொடங்குவதில் ஏதேனும் நடவடிக்கை எடுக்கிறார்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

சீ-வாட்ச் இன்டர்நஷனல் என்ற மற்றொரு தன்னார்வ தொண்டு நிறுவனம், இந்த படகு உட்பட, மத்தியதரைக் கடலில் ஆபத்தில் உள்ள படகுகளைத் தேடுவதாகக் கூறியது.

மத்தியதரைக் கடலைக் கடந்து ஐரோப்பாவுக்குள் நுழைய முயற்சிக்கும் வட ஆபிரிக்க குடியேற்றவாசிகள் இவ்வாறானதொரு நிலைமையை எதிர்கொள்வது இது முதல் சந்தர்ப்பம் அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. சனிக்கிழமையன்று, குறைந்தது 20 புலம்பெயர்ந்தோர் துனிசியாவின் கடற்கரையில் இருந்து காணாமல் போயுள்ளனர், அவர்கள் துரோகமான மத்தியதரைக் கடலைக் கடந்து இத்தாலிக்கு செல்ல முயன்றனர்.

தெற்கு நகரமான ஸ்பாக்ஸில் இருந்து அதே படகில் இருந்து 17 பேரை கடலோர காவல் படையினர் காப்பாற்றிய போதிலும், மற்றவர்களை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. காப்பாற்றப்பட்ட 17 பேரில் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக ஸ்பாக்ஸ் நீதிமன்ற நீதிபதி பௌசி மஸ்மௌஸ்தி தெரிவித்தார்.

இந்த வார தொடக்கத்தில், மோல்டாவிற்கு அப்பால் உள்ள சர்வதேச கடற்பரப்பில், மீன்பிடி படகில் நிரம்பி வழிந்த 440 புலம்பெயர்ந்தோர் மீட்கப்பட்டனர். இதில் இலங்கையர்களும் பயணித்தனர். புலம்பெயர்ந்தோரை மீட்பதற்கான சிக்கலான நடவடிக்கை 11 மணி நேரத்திற்கும் மேலாக நீடித்தது.

கப்பலில் இருந்த புலம்பெயர்ந்தோர் எந்த உதவியும் இல்லாமல் நான்கு நாட்கள் கடலில் கழித்தனர், கடைசி இரண்டு நாட்கள் கிழக்கு லிபியாவிலிருந்து புறப்பட்ட பிறகு உணவு அல்லது தண்ணீரின்றி அவர்கள் பயணித்திருந்தனர்.(அ)

# பிரான்ஸின் மார்செய் நகரில் மாடிக் குடியிருப்பு இடிந்தது!

## இருவரது சடலங்கள் மீட்பு இடிபாட்டுக்குள் ஏழு பேர்

பாரிஸ், ஏப். 11

பிரான்ஸின் தெற்கே மத்திய தரைக் கடல் துறைமுக நகரமான மார்செய்யில் நான்கு மாடிக் குடியிருப்புக் கட்டடம் ஒன்றின் இடிபாடுகளுக்குள் இருந்து சிக்குண்டோரை மீட்கும் பணிகள் தொடர்கின்றன. மார்செய்யின் கடற்படைத் தீயணைப்புப் பிரிவினர் 24 மணிநேர முயற்சிக்குப் பின்னர் இரண்டு பேரின் உடல்களை மீட்டிருக்கின்றனர். அவை இன்னமும் அடையாளம் காணப்படவில்லை காணாமற்போயுள்ளனர் எனக் கூறப்படும் குடியிருப்பு வாசிகள் ஏழு பேர் தேடப்படுகின்றனர்.



நகரின் நான்காவது நிர்வாகப் பிரிவில் உள்ள தெருவில் அமைந்திருந்த பழைய கட்டடமே இடிந்து வீழ்ந்துள்ளது.

நான்கு குடியிருப்புகளைக் கொண்ட அந்த நான்கு மாடிக் கட்டடம் சனிக்கிழமை நள்ளிரவு நேரம் பெரும் வெடியோசையுடன் இடிந்து வீழ்ந்த போது அந்தப் பிரதேசம் எங்கும் பெரும் பதற்றம் ஏற்பட்டது. அதிர்வினால் அயலில் உள்ள கட்டடங்களும் சேதமடைந்தன. அயலவர்களில் குறைந்தது ஐந்து பேர் காயமடைந்தனர். முதல் கட்டடம் இடிந்த அதிர்வினால் அருகே இருந்த இன்னொரு கட்டடமும் சிறிது நேரத்தின் பின்னர் இடிந்தது. அதில் எவரும் பாதிக்கப்படவில்லை.

குண்டு வெடிப்பது போன்ற பெரும் ஓசை எதனால் ஏற்பட்டது என்பது இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை. கட்டட இடிபாடுகளிடையே தீ மூண்டிருக்கிறது. அதனால் மோம்ப நாய்களைப் பயன்படுத்தி ஆட்களைக் கண்டு பிடிக்க முடியாதுள்ளதாக மீட்புப் பணியாளர்கள் தெரிவித்துள்ள னர். எரிவாயுக் கசிவே இந்த அனர்த்தத்துக்குக் காரணமாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

அயல் கட்டடங்களில் வசிக்கின்ற இருநூறு பேர் வரை அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். உள்துறை அமைச்சரும் வீடமைப்பு அமைச்சரும் சம்பவ இடத்துக்குச் சென்றிருக்கின்றனர்.

மார்செய் நகரில் உள்ள குடியிருப்புக் கட்டடங்களில் பெரும்பாலானவை மிகவும் பழையவை. சுமார் 40 ஆயிரம் பேர் அங்கு வசிப்பதற்கு ஆபத்தான கட்டடங்களில் குடியிருக்கின்றனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2018 இல் இரண்டு குடியி ருப்புக் கட்டடங்கள் இடிந்து வீழ்ந்த இதுபோன்ற ஒர் அனர்த் தத்தில் எட்டுப் பேர் உயிரிழந்திருந்தனர். (அ)

# சிறுவனுக்கு நாக்கு நீட்டிய விவகாரம்: மன்னிப்புக் கோரினார் தலாய் லாமா!

பீஜிங், ஏப். 11

திபெத் புத்த மதகுரு தலைவர் தலாய் லாமா ஒரு சிறுவனிடம் முத்தம் கோரிய காட்சி அடங்கிய வீடியோ ஒன்று வைரலாகி சர்ச்சையைக் கிளப்பியுள்ள நிலையில், தலாய் லாமா சம்பந்தப்பட்ட சிறுவன், அவரது பெற்றோர் மற்றும் அவனது நண்பர்கள் அனைவரிடமும் மன்னிப்பு கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவருடைய டுவிட்டர் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "அண்மையில் தலாய் லாமாவை ஒரு சிறுவன் சந்தித்த போது எடுக்கப்பட்ட வீடியோவில் இருந்த காட்சிகள் சர்ச்சையாகி விட்டது. அந்த வீடியோவில் சிறுவன், தலாய் லாமாவை அரவணைக்கலாமா எனக் கோருகிறார். அதற்கு தலாய் லாமா விளையாட்டாக செய்த காரியத்துக்கு வருந்துகிறார்.



அந்தச் சம்பவத்திற்காக சிறுவனிடமும், அவரது பெற்றோர், உலகம் முழுவதும் உள்ள சிறுவனின் நண்பர்களிடமும் மன்னிப்பு கோருவதாகத் தெரிவித்துள்ளார்.

அவர் எப்போதுமே அவர் சந்திக்கும் மக்களிடம் வேடிக்கையாக நடந்து கொள்வது வழக்கம். கமரா முன்னதாக இருந்தாலும், பொதுமக்கள் முன்னதாக இருந்தாலும் அவர் அதுபோல் வேடிக்கையாக நடந்து கொள்வார். இருப்பினும் அந்தச் சம்பவத்திற்கு அவர் வருந்துகிறார்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக நேற்று முன் தினம் இணையத்தளங்களில் ஒரு வீடியோ வைரலானது. அதில் சிறுவனின் உதட்டில் தலாய் லாமா முத்தமிடுகிறார். பின்னர் அச்சிறுவனை தலாய் லாமா தனக்கும் அவ்வாறே முத்தமிடுமாறும் தனது நாக்கை உறிஞ்சுமாறும் கூறுகிறார். இந்த வீடியோ உலகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நோபல் பரிசு வென்ற மத குரு உலக மக்கள் மத்தியில் பெரும் மதிப்பைப் பெற்ற தலாய் லாமா இவ்வாறாக செய்தது பாலியல் சீண்டலே என்று பலரும் கருத்து தெரிவித்து வருகின்றனர். மேலும் கமெரா முன்னால் நடந்த இந்த சம்பவத்தை சாட்சியாக வைத்து அவரை மதகுரு பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்றும் கோரியுள்ளனர். (அ)

# அமெ. ஜனாதிபதி பைடன் வட அயர்லாந்து செல்கிறார்

நியூயோர்க், ஏப். 11

அமெரிக்க ஜனாதிபதி பைடன் வடக்கு அயர்லாந்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

அப்போது புனித வெள்ளி சமாதான ஒப்பந்தத்தின் 25ஆவது ஆண்டு விழாவில் அவர் கலந்து கொள்ளவுள்ளார்.

வடக்கு அயர்லாந்து வந்திறங்கும் அமெரிக்க ஜனாதிபதி பைடனை இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் நேரில் சென்று வரவேற்கவுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிகழ்வின்போது ஜோ பைடன் பல்வேறு தொழிலதிபர்களை சந்திக்க உள்ளதாகவும், வடக்கு அயர்லாந்தில் முதலீட்டை அதிகரிப்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அந்தமான்,நிக்கோபார் தீவுகளில் நிலநடுக்கம்

போர்ட் பிளேர், ஏப். 11

அந்தமான்,நிக்கோபார் தீவுகளில் நேற்று காலை மட்டும் இரண்டு முறை நிலநடுக்கம் ஏற்பட்ட நிலையில், ரிச்டர் அளவில் 3.9 மற்றும் 4.6 ஆக பதிவாகியுள்ளது.

அதிகாலை கேம்பெல் பே என்ற இடத்திலிருந்து 220 கிலோமீற்றர் தொலைவில் 10 கிலோமீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

அந்தமான் நிக்கோபார் தீவுகளில் அடுத்தடுத்து நிலநடுக்கம் ஏற்பட்டதால் மக்கள் அச்சமடைந்துள்ளனர். நேற்று முன் தினம் ஒரே நாளில் நான்கு முறை நில அதிர்வுகள் உணரப்பட்ட நிலையில், மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்ட தால் மக்கள் அச்சமடைந் துள்ளனர்.

நேற்று முன்தினம் நான்கு முறை ஏற்பட்ட நிலநடுக்கங்களில் அதிகபட்சமாக ரிக்டர் அளவில் 5.5-ஆக பதிவானது குறிப்பிடத்தக்கது. (அ)


# சென்னை அணியின் முக்கிய வீரர்கள் காயம்!

சென்னை, ஏப். 11


சென்னை சுப்பர் கிங்ஸ் (சி. எஸ். கே.) அணி வீரர்களான தீபக் சாஹர், பென் ஸ்ரோக்ஸ் ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிராக மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தின்போது தீபக் சாஹருக்கு தசை நார் முறிவு ஏற்பட்டது. இதனால் அவர் முதல் ஓவரிலேயே ஆட்டத்திலிருந்து வெளியேறினார். இதேபோல், பென் ஸ்ரோக்ஸுக்கு பாதத்தில் காயம் ஏற்பட்டுள்ளது.

இத்தகவலை சென்னை அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது. சென்னை அணி அடுத்ததாக ஏப்ரல் 12ஆம் திகதி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் ராஜஸ்தான் அணிக்கெதிராக விளையாடவுள்ளது. அந்தப் போட்டியில் இந்த 2 வீரர்களும் பங்கேற்பார்களா என்பது தெரியவில்லை. (ஐ)






## ரிங்கு சிங் அதிரடி விளாசல் கொல்கத்தா அபார வெற்றி!

அஹமதாபாத், ஏப். 11

குஜராத் ரைட்டன்ஸ் அணிக்கு எதிரான ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. கடைசி ஓவரில் 29 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் 5 சிக்ஸர்களை விளாசி கொல்கத்தா அணியை வெற்றி பெறச் செய்தார் ரிங்கு சிங்.

குஜராத், கொல்கத்தா அணிகளுக்கு இடையிலான லீக் ஆட்டம் நேற்றுமுன்தினம் நடந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 204 ஓட்டங்களைக் குவித்தது.

ரித்திமன் சஹா 17, ஷுப்மன் கில் 39, அபிநவ் மனோகர் 14 ஓட்டங்கள் எடுத்தனர். சாய் சுதர்ஷன் அபாரமாக விளையாடி 53 ஓட்டங்களைக் குவித்தார். 5 சிக்ஸர்கள், 4 பௌண்டரிகளுடன் விஜய் சங்கர் 63 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். டேவிட் மில்லர் 2 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

கொல்கத்தா அணி தரப்பில் சுனில் நரைன் 3, சுயாஷ் சர்மா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

205 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கொல்கத்தா அணி விளையாடியது. தொடக்க வீரர்கள் ரஹமனுல்லா குர்பாஸ் 15, என். ஜெகதீசன் 6 ஓட்டங்கள் எடுத்து வீழ்ந்தனர். ஆனால், 3ஆவது விக்கெட்டுக்கு ஜோடி

சேர்ந்த வெங்கடேஷ் ஐயரும் அணித் தலைவர் நிதிஷ் ராணாவும் அபாரமாக விளையாடினர். நிதிஷ் ராணா 29 பந்துகளில் 45 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்த வெங்கடேஷ் ஐயர் 40 பந்துகளில் 83 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் வீழ்ந்தார்.

15.5 ஓவர்களில் கொல்கத்தா அணி 4 விக்கெட் இழப்புக்கு 154 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்தது. அப்போது 17ஆவது ஓவரை வீச வந்த அணித்தலைவர் ரஷித் கான் முதல் 3 பந்துகளில் அன்ரே ரஸல், சுனில் நரைன், ஷர்துல் தாகூர் ஆகியோரின் விக்கெட்களை கைப்பற்றி ஹட்ரிக் சாதனை படைத்தார்.

இதனால் அந்த அணி 155 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்கள் என்ற மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டது. ஆனால், 8ஆவது விக்கெட்டுக்கு இணை சேர்ந்த ரிங்கு சிங்கும், உமேஷ் யாதவும் அபாரமாக விளையாடினர். கடைசி ஓவரில் அந்த அணி வெற்றி பெற 29 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அந்த ஓவரை யஷ் தயாள் வீசினார். முதல் பந்தில் ஓர் ஓட்டம் எடுக்கப்பட்டது. அதன் பின்னர் அடுத்த 5 பந்துகளையும் சிக்ஸருக்கு பறக்கவிட்டார் ரிங்கு சிங்.

இதனால் அந்த அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ரிங்கு சிங் 48 ஓட்டங்களும் (21 பந்துகள்), உமேஷ் யாதவ் 5 ஓட்டங்களும் (6 பந்துகள்) எடுத்து களத்தில் இருந்தனர்.

ஆட்டநாயகனாக ரிங்கு சிங் தேர்வானார்.

3 போட்டிகளில் விளையாடியுள்ள கொல்கத்தா அணிக்கு இது 2ஆவது வெற்றியாக அமைந்தது. அதே நேரத்தில் குஜராத் அணி முதல் தோல்வியைப் பெற்றுள்ளது.




## முதல் வெற்றியை பதிந்தது ஹைதராபாத்!

ஹைதராபாத், ஏப். 11

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 14ஆவது லீக் போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் மற்றும் பஞ்சாப் கிங்ஸ் அணிகள் விளையாடின. இந்தப் போட்டியில் 144 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்கை ஹைதராபாத் அணி விரட்டி வெற்றி பெற்றுள்ளது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற அந்த அணி பந்துவீச்சைத் தேர்வு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஷிகர் தவன் தலைமையிலான பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்பிற்கு 143 ஓட்டங்கள் எடுத்தது. தவான் இறுதிவரை விக்கெட்டை இழக்காமல் 66 பந்துகளில் 99 ஓட்டங்கள் குவித்தார். 12 பௌண்டரிகள், 5 சிக்ஸர்கள் இதில் அடங்கும். இருந்தும் அவருடன் அந்த அணியின் துடுப்பாட்ட வீரர்கள் யாரும் நிலைத்து நின்று துடுப்பெடுத்தாடாததால் பெரிய இலக்கை நிர்ணயிக்க தவறியது.

இலக்கை விரட்டிய ஹைதராபாத் அணிக்காக ஹாரி ப்ரூக் மற்றும் மயங்க் அகர்வால் களம் கண்டனர். ப்ரூக் 13ஓட்டங்களிலும், மயங்க் 21 ஓட்டங்களிலும் வெளியேறினார். பின்னர் வந்த அந்த அணியின் தலைவர் மார்க்ரம் உடன் கூட்டணி அமைத்தார் ராகுல் திரிபாதி.

17.1 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 145 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது ஹைதராபாத். திரிபாதி 48 பந்துகளில் 74 ஓட்டங்களுடனும், மார்க்ரம் 21 பந்துகளில் 37 ரன்களுடனும் ஆட்டத்தை நிறைவு செய்தனர். பஞ்சாப் அணி இந்தத் தொடரில் பெற்ற முதல் தோல்வியாக இது அமைந்துள்ளது. அதே போல நடப்பு தொடரில் ஹைதராபாத் அணியின் முதல் வெற்றி இது.

## ஐரோப்பிய கழக உதைபந்தில் மெஸ்ஸி புதிய சாதனை படைப்பு!

பாரிஸ், ஏப். 11

ஐரோப்பாவின் கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்ட போட்டியில் அதிக கோல்கள் என்ற சாதனையை மெஸ்ஸி தன்வசமாக்கியுள்ளார். முன்னதாக இந்த சாதனையை ரொனால்டோ வைத்திருந்தார்.

உதைபந்தாட்ட ஜாம்பவனான லயனல் மெஸ்ஸி. பிரான்ஸ் நாட்டில் பாரிஸ் சென் ஜெர்மைன் (பி.எஸ்.ஜி) கழகத்துக்காக விளையாடி வருகிறார்.

பிரான்ஸ் உதைபந்தாட்ட 'லீக்' போட்டியில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டம் ஒன்றில் பி.எஸ்.ஜி - நைஸ் அணிகள் மோதின. இதில் பி.எஸ்.ஜி. 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் மெஸ்ஸி 26ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். இதன்மூலம் ஐரோப்பிய கழக உதைபந்து போட்டியில் அதிக கோல் அடித்தவர் என்ற சாதனையை மெஸ்ஸி பிடித்தார். அவர் ரொனால்டோவை முந்தி புதிய சாதனை புரிந்தார்.

மெஸ்ஸி 841 போட்டிகளில் 702 கோல்களை அடித்துள்ளார். கிறிஸ்டியானா ரொனால்டோ 949 போட்டிகளில் 701 கோல்கள் அடித்துள்ளார். ரொனால்டோவை விட குறைவான போட்டிகளில் விளையாடி மெஸ்ஸி அதிக கோல்களை அடித்துள்ளார். (ஐ)

## ஷுப்மன் கில் புதிய மைல்கல்!

அஹமதாபாத், ஏப். 11

ஐ. பி. எல். இருபது - 20 அரங்கில் 2 ஆயிரம் ஓட்டங்களை குறைந்த வயதில் எட்டிய 2ஆவது வீரர் என்ற பெருமையை குஜராத் அணி வீரர் ஷுப்மன் கில் பெற்றுள்ளார்.

23 ஆண்டுகள் 214 நாட்களில் ஐ. பி. எல். போட்டிகளில் 2 ஆயிரம் ஓட்டங்களைக் குவித்துள்ளார் கில். ரிஷப் பந்த் 23 ஆண்டுகள் 27 நாட்களில் 2 ஆயிரம் ஓட்டங்களைக் குவித்து இந்தப் பட்டியலில் முதலிடத்தில் இருக்கிறார்.

3ஆவது இடத்தில் சஞ்சு சாம்சன் (24 ஆண்டுகள் 140 நாட்கள்), 4ஆவது இடத்தில் விராட் கோலி (24 ஆண்டுகள் 175 நாட்கள்), 5ஆவது இடத்தில் சுரேஷ் ரெய்னா (25 ஆண்டுகள் 155 நாட்கள்) உள்ளனர். (ஐ)




DAN TELEVISION
வழங்கும்
SAT
15TH
APRIL
மாபெரும்
சித்திரைக்கொண்டாட்டம்
தமிழகத்தின்
நாட்டுப்புற நாயகன்
சுரேஷ்குமார் ரா
இசைக்குழு
யாழ் ஸ்ருதி
நேரம் - 7.00 pm
இடம் - யாழ் முத்தவெளிமைதானத்தில்
அனைத்துச் சொந்தங்களையும் அன்புடன் அழைக்கின்றோம்

ஈழநாடு
Eelanadu ஈழநாடு

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தில் வெளிப்படைத்தன்மை இல்லை!

## எச்சரிக்கிறது ஐரோப்பிய ஒன்றியம்

கொழும்பு, ஏப். 11

**இலங்கையின் கொடூரமான பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்கு மாற்றீடு செய்ய முன் மொழியப்பட்டிருக்கும் சட்டமூலத்தில் வெளிப்படைத்தன்மை இல்லை என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.**

ஜி.எஸ்.பி. பிளஸ் வரி சலுகை களை வழங்கவேண்டுமா இல்லையா என்பது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் முடிவு எடுப்பதற்கு முன்னதாகவே இந்த புதிய மாற்றுச் சட்டமூலம் முன்வைக்கப்பட்டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலைத் தீவுக்கான தூதுவர் டெனில் சைபி தெரிவித்துள்ளார்.

இந்த புதிய சட்டத்தை ஏற்றுக் கொள்ளாமல் ஜி.எஸ்.பி. பிளஸ் வரி சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் நீடிக்கத் தவறினால், இலங்கைக்கு 500 மில்லியன் டொலர் மதிப்பிலான வர்த்தகச் சலுகை கிடைக் காமல் போகக்கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

பயங்கரவாத அமைப்புகளை அடையாளப்படுத்தும் போது நீதித் துறை மற்றும் மக்களது கோரிக் கையை கருத்திற்கொள்ள வேண்டும் என்றும் இலங்கையில், இந்த செயல்முறை மிகவும் குறைவான வெளிப்படைத் தன்மையை கொண் டுள்ளது என்றும் குறிப்பிட்டார். (அ)

## முரண்பாட்டு அரசியலை மொட்டு விரும்பியதில்லை

### நாமல் ராஜபக்ஷ எம்.பி

கொழும்பு, ஏப். 11

நாம் நம்பிக்கை கொண்டுள்ள அரசியலில் முரண்பாடுகளுக்கும் அமைதியின்மைக்கும் அனுமதிக்கப் போவதில்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு, கொலன்னாவ பிரதேசத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுஜன பெரமுனவைச் சேர்ந்தவர்கள் அமைதியானவர்கள். கிராமங்களில் அரசியல் செய்யும் தரப்பினர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இருப்பவர்கள் மிகவும் அமைதியானவர்கள்.

எமது பொறுமைக்கும் எல்லை உண்டு. எனினும் நாம் முடிந்தளவில் பொறுமைக் காப்போம்.

ஏனெனில் நாம் முரண்டுபாகளை தோற்றுவிப்பதற்கு ஒருபோதும் விரும்பியதில்லை.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜாக்ஷவே 2015ஆம் ஆண்டு நாட்டின் அரசியலில் காணப்பட்ட முரண்பாடு களை கலைந்தவர்.

ஆரம்பத்தில் வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்வர்களிடம் தேசிய அடையாள அட்டையை கோரும் நடைமுறை இருக்கவில்லை. சிலர் வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்லும்போது அவர்களது வாக்குகள் ஏற்கெனவே செலுத்தப்பட்டு இருக்கும்.

எனினும் மகிந்த ராஜபக்ஷ அந்த யுகத்தை மாற்றியமைத்தார்.

மகிந்த ராஜபக்ஷவே, வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்லும்போது தேசிய அடையாள அட்டையை கொண்டு செல்லவேண்டியது அவசியம் என்ற மாற்றத்தை கொண்டுவந்தார்.

ஏனெனில் வாக்களிப்பு நிலையங்களில் முரண்பாடுகள் ஏற்படுவதற்கு இதுவே காரணம் என்பதை அவர் உணர்ந்துகொண்டதன் காரணமாகவே இந்த மாற்றத்தைக் கொண்டுவந்தார்.

எனவே எமது அரசியல் கட்சியானது ஒருபோது முரண்பாடுகளை விரும்பியதில்லை. அமைதியான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடவே விரும்பியது.

நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என்பதிலேயே நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்-என்றார். (அ)

## 44 மில்லியன் ரூபா பெறுமதியான கேரள கஞ்சா வல்வையில் மீட்பு!

யாழ்ப்பாணம், ஏப். 11

வல்வெட்டித்துறை கடற்பிராந்தியத்தில் 44 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

கடற்படையினரால் நேற்றுமுன்தினம் இமுன்னெடுக்கப்பட்ட விசேட ரோந்து நடவடிக்கையின்போது குறித்த கேரள கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட் டுள்ளன.

கடலில் மிதந்துகொண்டிருந்த நிலையில் 134 கிலோ 300 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

58 பொதிகளில் இவை பொதியிடப்பட்டிருந்தது டன், சந்தேகநபர்களால் இவை கடலில் இடப்பட்டிருக்கலாம் என கடற்படையினர் சந்தேகிக்கின்றனர். (அ)

## எல்லை நிர்ணய குழுவின் அறிக்கை அடுத்த இரு தினங்களில் பிரதமருக்கு

கொழும்பு, ஏப். 11

உள்ளூராட்சி அதிகார சபைகளை எல்லை நிர்ணயம் செய்வதற்கான ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை எதிர்வரும் இரண்டு நாட்களுக்குள் கையளிக்கப்படவுள்ளது.

உள்ளூராட்சிக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையி பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் இந்த அறிக்கை கையளிக்கப்படும் என அதன் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

அறிக்கையை கையளித்த பின்னர், மக்களுக்கு அறிவிப் பதற்காக விசேட ஊடகவியலாளர் சந்திப்பு நடத்தப் பட்டும் என்றும் மகிந்த தேசப்பிரிய குறிப்பிட்டார்.

தற்போதுள்ள 8,000க்கும் மேற்பட்ட உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை பாதியாகக் குறைப்பதே குழுவின் திட்டம் என்பது குறிப் பிடத்தக்கது. (அ)

## கட்டளையை மீறி சென்ற கார் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம்!

கொழும்பு, ஏப். 11

கட்டளையை மீறி பயணித்த கார் ஒன்றின் மீது பொல்கஹவெல பகுதியில் பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

பொல்கஹவெல நீதிமன்றத்திற்கு அருகே இந்த துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் கிடைத்த தகவலுக்கு அமைய, குறித்த காரை நிறுத்துமாறு பொலிஸார் கட்டளை பிறப்பித்துள்ளனர்.

கட்டளையை மீறி குறித்த கார் பயணித்த போதே துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இதன்போது எவருக்கும் காயம் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பெண்ணொருவர் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

## ரூபாய் மதிப்பு மேலும் வலுவடைவு!

கொழும்பு, ஏப். 11

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு நேற்று திங்கட்கிழமை மேலும் வலுவடைந்துள்ளது.

மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி டொலர் ஒன்றின் விற்பனை விலை 327 ரூபாய் 72 சதங்களாகும்.

கொள்விலை 311 ரூபாய் 63 சதங்களாக பதிவு செய்யப்பட்டது. கடந்த வெள்ளிக்கிழமை டொலர் ஒன்றின் விற்பனை விலை 330 ரூபாய் 56 சதங்களாக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 2000 அரசு ஊழியர்களுக்கு 5 ஆண்டுகள் விடுறை

கொழும்பு, ஏப். 11

அரசாங்கத்தில் பணியாற்றிய ஊழியர்கள் 2000 ஊழியர்கள் வெளிநாடுகளுக்கு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அரச தரப்பு தெரிவித்துள்ளது.

ஐந்தாண்டு ஊதியம் இல்லாத உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விடுமுறைக்காக 30 ஆயிரம் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதும் 2,000 விண்ணப்பங்கள் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஜூன் மாதம் 22 ஆம் திகதி அரச ஊழியர்களுக்கு 05 வருட காலத்திற்கு வெளிநாடு செல்வதற்கான சுற்றறிக்கையை பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு வெளியிட்டிருந்தது.

அதன்படி, கடந்த 1ஆம் திகதி வரை உள்நாட்டு விடுமுறைக்கான 150 விண்ணப்பங்களும், வெளிநாட்டு விடுமுறைக்கான 1000 விண்ணப்பங்களும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

கடந்த 6 மாதங்களில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப் பங்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் எதிர்காலத்தில் இந்தத் தொகை அதிகரிக்கலாம் என அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பல அரச ஊழியர்கள் கொரியாவுக்குச் செல்வதற்காக வெளிநாட்டு விடுமுறைக்கு விண்ணப்பிக்கின்றனர் மற்றும் பெரும்பாலான விண்ணப்பங்கள் மொழிப் பிரச்னை காரணமாக நிராகரிக்கப்படுகின்றன.

எனினும், மொழியைக் கற்றுக்கொண்ட பிறகு மீண்டும் விண்ணப்பிப்பார்கள், அதற்கு குறைந்தது ஆறு மாதங்கள் ஆகும், அதன்படி, வெளிநாட்டு விடுப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கை எதிர்காலத்தில் அதிகரிக்கலாம் என்று அவர் கூறினார். (அ)

## போராட்டக்காரர்களை தூக்கிலிட வேண்டும்!

### மொட்டு பாராளுமன்ற உறுப்பினர் ஆவேசம்

கொழும்பு, ஏப். 11

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குற்றவாளிகளையும், காலிமுகத்திடல் போராட்டக்காரர்களையும் மக்கள் முன்னிலையில் தூக்கிலிட வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான ஜோன்சன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமைக்கு இந்த இரண்டு தீவிரவாதத் தரப்பினர்களே முக்கியமான காரணகர்த்தாக்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினமன்று நடத்தப்பட்ட தாக்குதலின் குற்றவாளிகளுக்கு இன்னமும் உரிய தண்டனை வழங்கப்படவில்லை. தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்கள் நீதி வேண்டி அலைந்து திரிகின்றார்கள்.

அந்தத் தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட சகல குற்றவாளிகளும் தண்டிக்கப்பட வேண்டும். அவர்கள் அனைவரையும் தூக்கிலிட வேண்டும்.

அதேவேளை, ராஜபக்ச அரசாங்கத்திற்கு எதிராகப் போராடிய காலிமுகத்திடல் போராட்டக்காரர்களையும் தூக்கிலிடவேண்டும்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமைக்கு இந்த இரண்டு தீவிரவாதத் தரப்பினர்களே முக்கியமான காரணகர்த்தாக்கள். இவர்கள் சர்வதேச நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்பட்டவர்கள்.

அமைதியான - அழகான இலங்கையை இவர்கள் தான் நாசமாக்கினார்கள். இவர்களை மக்கள் முன்னிலையில் தூக்கிலிட்டுத் தண்டிக்க வேண்டும். அப்போது தான் நாட்டிலிருந்து தீவிரவாத விஷக்கிருமிகளை முற்றாக ஒழிக்க முடியும்-என்றார். (அ)

## ஆங்கிலேயர் கால ரயில் பாதையை புனரமைப்பதற்கு அரசாங்கம் திட்டம்

கொழும்பு, ஏப். 11

நானுஓயாவில் இருந்து நுவரெலியா வழியாக ராகலை வரையான பிரித்தானிய கால ரயில் பாதையை புனரமைக்க போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு வெளிநாட்டு முதலீடுகளை நாடவுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

31 கிலோமீற்றர் நீளமுள்ள இந்த குறுகிய தொடருந்து பாதை, ஆங்கிலேயர் காலத்தில் அமைக்கப்பட்டது.

இருப்பினும், இது வணிக ரீதியாக நம்பகத்தன்மை இல்லாததால், பின்னர் பிரித்தானிய ஆட்சியாளர்களால் பாவனையிலிருந்து நீக்கப்பட்டது.

கட்டமைத்தல், இயக்குதல், இடமாற்றம் மாதிரியின் கீழ் இந்த பாதையை புனரமைக்க வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இருந்து ஆர்வத்தை வெளிப்படுத்துமாறு அரசாங்கம் அழைப்பு விடுக்கும் என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

உலகின் ஆறாவது மிக உயரமான ரயில் நிலையமாக கருதப்படும் கந்தபொல ரயில் நிலையம் இந்த ரயில் பாதையில் அமைந்துள்ளது.

இந்த ரயில் பாதையை புனரமைப்பதன் ஊடாக சுற்றுலா வளர்ச்சிக்கு அதிக வாய்ப்புகள் உள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.